# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா



ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்

இணுவில் (சி-1617) T.P.-2223565



மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷ..பான் 18 (15.10.2003) புதன்கிழமை இதழ்:15


## குரங்குபாஞ்சான் சென்ற சிஹல உறுமயவை பொலிஸார், படையினர் திருப்பியனுப்பினர்!

திருகோணமலை - குரங்குபாஞ்சானிலுள்ள புலிகளின் முகாமை நேற்றுப் பார்வையிடச் சென்ற சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ண தலைமையிலான குழுவினரை இராணுவத்தினரும் பொலிஸாரும் திருப்பியனுப்பினர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது - திருகோணமலை - கந்தளாய்க்குச்சென்ற திலக் கருணாரட்ண தலைமையிலான குழுவினர், அங்கிருந்து தம்பலகாமம் பிரதான வீதியூடாக கோணஸ்வரர் ஆலயத்தைச் சென்றடைந்தனர்.

அங்கிருந்து சுமார் 8 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள சூரன்கல் இராணுவ முன்னரங்க நிலைகளைத் தாண்டி, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள குரங்குபாஞ்சான் முகாமைப் பார்வையிட இவர்கள் முயன்றனர்.

ஆனால், சூரன்கல் இராணுவத் தடைமுகாமிலிருந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் இவர்களை குரங்குபாஞ்சான் பகுதிக்குச் செல்ல அனுமதி மறுத்ததோடு, அங்கு கூடியிருந்த சிஹல உறுமயவைச் சேர்ந்த 400 இற்கு மேற்பட்டோரை அங்கிருந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எந்த இலங்கையனும் இந்தியாவுக்கு எதிரானவனாக இருக்க முடியாது!

### கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி

எந்தவொரு இலங்கையனும் இந்தியாவுக்கு எதிராக இருக்கமுடியாதென, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி - பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்தியா 25 மைல்களுக்கப்பால் உள்ளநாடு. எப்பொழுதும், எந்த நேரத்திலும் ஒரு தேவைக்கு ஓடிவரக்கூடிய நாடு. இதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இன்று - இந்தியா சமாதானத் தீர்வு முயற்சியில் ஈடுபடாமல் இருப்பதற்கு ஒரு காரணியும் இருக்கிறது. இந்தியாவின் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



சங்கரியாற்ரை நியாயத்தைப் பாருங்கோவன்...!

# டென்மார்க் அரசாங்க அதிகாரிகளுடன் தமிழ்ச்செல்வன் குழுவினர் நீண்ட பேச்சு!

### தொடர்ந்து தென்னாபிரிக்காவுக்கும் செல்வர்?

**டென்மார்க் நாட்டுக்கு விஜயம் செய்துள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழு, நேற்று அந்த நாட்டு வெளியுறவு அமைச்சுப் பிரதிநிதிகளைச் சந்தித்து நீண்ட நேரம் பேச்சுக்களை நடத்தினர்.**

இந்தப் பேச்சுவார்த்தை காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது. பேச்சுக்கள் ஐரோப்பிய நேரம் 4 மணிவரை நீடித்ததாக அங்கிருந்து கிடைத்த தகவல் தெரிவித்தது.

இந்தச் சந்திப்பை முடித்துக் கொண்டு நேற்று மாலை நோர்வே சென்ற விடுதலைப் புலிகள், அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் உட்பட, முக்கிய அரச தலைவர்களைச் சந்திக்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில், டப்ளின் நகரில் புலிகள் தயாரித்த இடைக்கால நிர்வாகத் திட்டத்திற்கான மாற்று யோசனைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர்

(10 ஆம் பக்கம் பார்க்க)





டென்மார்க் வெளியுறவு அமைச்சு அதிகாரிகள், புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை நேற்றுச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படங்கள்.

## மன்னாரில் இன்று பொங்குதமிழ் நிகழ்வு!

(மன்னார்)

"எமது நிலம் எமக்கு வேண்டும். நாங்கள் எங்கள் வீடுகளுக்குச்செல்ல, இராணுவமே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்'' என்ற தொனிப்பொருளில் - இன்று மன்னாரில் பொங்குதமிழ் மாபெரும் உணர்வெழுச்சியுடன் நடைபெறுகின்றது.

மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும் பொங்குதமிழ் நிகழ்வு, மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெறும். கூட்டத்துடன் நிறைவு பெறும்.

சித்தி விநாயகர் பாடசாலையிலிருநது ஆரம்பமாகும் ஊர்வலம் - மன்னார் நகர மையமூடாகவும், செபஸ்தியார் கோவிலடியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் - ஆஸ்பத்திரி வீதியுடாகவும், புனித சவேரியார் ஆண்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய சமாதான நடவடிக்கைகளால் நாடு பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது!

### அஸ்கிரியபீட மகாநாயக்க தேரர் கூறுகிறார்

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளால், நாட்டுக்குப் பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும்,

இது குறித்து தாம் விரைவில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய உடுகம சிறீ புத்தரகித்த மகாநாயக்க தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற பௌத்த மத வைபவமொன்றில், கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்த தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் கடிதமொன்றை - விரைவில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் ரணில் விக்கிமசிங்கவுக்கும் அனுப்பவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியையும், பிரதமரையும் உடனடியாகக் கண்டிக்கு வரவழைத்து, இது பற்றி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வந்துள்ள கனேடிய அமைச்சர் யாழ்.வரவும் திட்டம்!

கொழும்பு வந்துள்ள கனேடிய வெளியுறவு அமைச்சர் பெல் கிரஹாம் - போரினால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள யாழ்.குடாநாட்டுக்கும் வருகைதரவுள்ளார்.

அமைச்சரின் இலங்கை விஜயத்தின் நோக்கம் - இலங்கையின் இனப்பிரச்சினைக்கு கனடா எவ்வகையில் உதவி செய்வது என்பதாகும் என, கனேடிய தூதுவராலயம் தெரிவித்துள்ளது. அரசியல் தீர்வு மூலமே இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்கலாம் என கனேடிய அமைச்சர் தெரிவித்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பொ.ஐ.முவால் கைவிடப்பட்டது!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டுவரத் திட்டமிட்டிருந்த நம்பிக்கையில்லா பிரேரணையை, கைவிட்டுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருவதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

அண்மையில் ஐ.நா. சபையில் பிரதமர் ரணில் ஆற்றிய உரை தொடர்பாக, பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க இந்த மாத முற்பகுதியில் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டுவரத் திட்டமிட்டிருந்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியினர், நாடாளுமன்ற சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவிடம் எதிர்வரும் 23 ஆம் திகதி பிரதமரின் உரை தொடர்பாக விவாதம் நடத்த அனுமதி கேட்டிருந்தனர். ஆனால், திடீரென அவர்கள் தாம் கொண்டுவர எண்ணியிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


EXPOAIR
your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1620)

எக்ஸ்போஎயார்
வான் வெளியில்
உங்கள் தோழன்...

# பூரண அதிகாரம் உள்ள இடைக்கால நிர்வாகம் வடக்கு - கிழக்கில் அமைக்கப்படவேண்டும்

## யாழ். வணிகர் கழகம் தேசியத் தலைவருக்கு கடிதம்

யாழ்.நகரில் மூன்றில் ஒரு பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக இருகின்றன. இதனால் பல வர்த்தக நிலையங்கள், மினி முகாம்களாக இருந்து வருவதால், வர்த்தக சமூகம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது என, யாழ்ப்பாண வணிகர் கழகம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அந்தக் கடித்ததில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தாங்கள் தமிழ் மக்களின் விடிவுக்காக கடந்த இருபது ஆண்டுகளாகத் தமிழீழம் ஒன்றினைப் பெறுவதற்கு அயராது போராடி, தற்போது பேச்சு வார்த்தை மூலம் சுயநிர்ணய உரிமையுடன் தமிழ் மக்கள் வாழக்கூடிய நிரந்தரத் தீர்வினைப் பெறுவதற்கு, தற்போதைய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதை நாம் பாராட்டுகின்றோம்.

நிரந்தர சமாதானத்திற்கு முன்னோடியாக எமது மக்களின் வாழ்வில் சுமுகநிலையை உண்டாக்கக் கூடிய ஒரு இடைக்கால நிர்வாகத்தை, தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதுடன், அந்த இடைக்கால நிர்வாகத்தில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூரணமாக உள்ளடக்கப்படவேண்டும் என்பதே எமது பேரவா.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒன்றரை வருடங்கள் கழிந்த பின்பும், இதுவரை எந்தவொரு அபிவிருத்தியும் தமிழ் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை. புனர்நிர்மாணப் பணிகள் சரியான முறையில் அமுல்படுத்தப்படவில்லை.

உயர்பாதுகாப்பு வலயங்கள் என்னும் போர்வையில், எமது வளமான நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு பாதுகாப்பு வலயங்களாக ஆக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படாது, இன்னும் அகதி வாழ்வினையே அனுபவித்து வருகின்றனர். ஆகவே, உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுவதுடன், அங்கு பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் யாவும் புனரமைக்கப்பட வேண்டும்.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் உள்ள மினிமுகாம்கள், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் அகற்றப்படாமையால் அங்குள்ள மக்கள் பலவகையிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்.நகரில் மூன்றிலொரு பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக இருப்பதனாலும், மினிமுகாம்கள், பல வர்த்தக நிலையக் கட்டடங்களில் இருப்பதனாலும், வர்த்தக சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. போரினால் சேதமுற்ற வர்த்தக ஸ்தாபனங்கள் அதன் கட்டடங்கள் ஆகியன புனர்நிர்மாணம் செய்வதற்கான உதவிகள் இதுவரை வழங்கப்படவில்லை.

எமது மக்களின் வாழ்க்கையில் ஓர் சுமுகமான இயல்புநிலையை உணடாக்குவதற்கும், அவர்கள் தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஓர் பூரண அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாகத்தில் காணி, நிதி, நீதி, சட்டம், பாதுகாப்பு என்பன உள்ளடக்கப்பட்டு இருக்க வேண்டும். அப்படியான ஓர் இடைக்கால நிர்வாகத்தை தாங்கள் பெறுவதற்கு தமிழ் மக்களின் பூரண ஆதரவு என்றும் கிடைக்குமென, நாம் திடமாக நம்புகின்றோம்.

தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன், சுதந்திரமாக வாழக்கூடிய ஓர் அரசியற்தீர்வே, தமிழ்மக்களின் இன்றைய அபிலாஷை என்பதைத் தங்களுக்கு மீண்டும் அன்புடன் அறியத்தருகிறோம். எனத் தெரிவிக்கப்பட்டுளது.

### அரியாலை மாம்பழம் சந்தியில்

## பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை மனித உரிமை ஆணைக்குழு பதிவு!

அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில், கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தினையடுத்து, நடைபெற்ற அனர்த்தத்தில் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பத்திரிகை நிருபர்களிடம் நேரில் சென்று, சம்பவம் தொடர்பாகவும், தாக்கப்பட்டது தொடர்பான விபரங்களையும் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் பதிவுசெய்துள்ளனர்.

இது தொடர்பாக, தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அண்மையல் இடம்பெற்ற சம்பவத்தல், பல பொதுமக்கள் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். பலரது சைக்கிள்களும், மோட்டார் சைக்கிள்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில், செய்தி சேகரிக்கச்சென்ற பத்திரிகையாளர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பலரது எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறு விளம்பரம்

### பணிப்பெண் தேவை

கொக்குவிலில் உள்ள சிறிய குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு 50 வயதிற்கு மேற்பட்ட பெண் தேவை. தொடர்பு:- தொலைபேசி இலக்கம் 2225179 (505)

ராஜா யாழ்ப்பாணம்.

பிரசாந், கிரண், நடித்த

வின்னர்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30.
9.30 (பு.நே)

(சி-1619)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், ஜோதிகா, விவேக் நடித்த

தூள்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

(சி-1618)

Tuhedo

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

சங்கானை கல்விக் கோட்ட பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையும், இலவச கருத்தரங்கும் நடைபெறவுள்ளது.

மக்கள் வங்கி சங்கானைக் கிளையின் அனுசரணையுடன், கோட்ட அதிபர் சங்கத்தினால் நடாத்தப்படும் முன்னோடிப் பரிட்சை எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இப் பரீட்சையில் முதலாம் இடத்தைப் பெறும் மாணவர்களுக்கு தங்கப் பதக்கமும் -

இரண்டாம் இடத்தைப் பெறுபவருக்கு வெள்ளிப் பதக்கமும், மூன்றாம் இடத்தைப் பெறுபவருக்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப்படும் என பரீட்சைக்குழு அறிவித்துள்ளது.

### வாசிகசாலை புனரமைப்பு

கியூடெக் நிறுவனத்தின் உதவியுடன் இளையோர் சேவை மன்றத்தினால் பெரிய பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வாசிகசாலை ஒன்றை புனரமைப்புச் செய்து கடந்த புதன்கிழமை திறந்துவைத்தனர். அதே போன்று கட்டைக்காட்டிலும் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் வாசிகசாலை ஒன்று திறந்துவைக்கப்பட்டதுடன் மாலை நேர இலவசக் கல்வி வகுப்புக்களும் நடைபெற்று வருகிறது. இவற்றுடன் இவ் இரு இடங்களிலும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் நடத்தப்பட்டது.

## பெயர் மாற்றம்

**செல்வநாயகபுரம் அச்சுவேலியைச் சேர்ந்த சீவரெத்தினம் பசுபதி ஆகிய நான் 15.10.2003 முதல் எனது பெயரை ஜீவராணி பசுபதி எனப் பெயர்மாற்றம் செய்கிறேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.**

*செல்வநாயகபுரம்,*
*அச்சுவேலி.* (504) **சீவரெத்தினம் பசுபதி**

## சர்வதேச வெண்பிரம்பு தினம்

### அக்ரோபர் - 15

வையகத்தில் பார்வையற்றோர்
வலுவிழந்தோர் ஆகி
தாழ்வு நிலை கொண்டு
தடுமாறி நின்றிடாமல்
தலைநிமிர்ந்து உலகில் வாழ
வழிகாட்டி நிற்கும் வெண் பிரம்பே
எம்மவர்க்கு என்றுமே நீ
துணையாகிட வாழ்த்துகிறோம்

**சர்வதேசங்களிலும் உள்ள விழிப்புல வலுவிழந்தவர்களை பல்கலையும் கற்று பல்துறையிலும் வளர்ந்து பல்லாண்டு வாழ வாழ்வகம் வாழ்த்துகிறது.**

*சபாபதிப்பிள்ளை வீதி,* வாழ்வகம்
*சுன்னாகம்.* (503) 15.10.2003

## பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

வந்துவிட்டது

'**திவான்**' வியாபாரக் குறியீடு கொண்ட கணக்குக் குற்றிகள்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான
பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள்,
பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருட்களுக்கான
மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள், வாத்தியக் கருவிகள்,
விளையாட்டுப் பொருள்கள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள்,
பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட
இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர்
மற்றும்
'அறிவு அமுது', அந்திவானம் பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள்
யாவும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**குறிப்பு:-** எம்மிடம் டின் குற்றிகளுக்கு பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

021 222 5542

212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1676)

## இளவாலை

### திருமறைக் கலாமன்றம் நடாத்தும்

# "நாடகப் போட்டி"

கருப்பொருள் :- நாட்டின் சமாதான செயற்பாடுகளையும், சமகால நிகழ்வுகளையும் பிரதிபலிக்கக் கூடியதாக அமைதல் வேண்டும்.

நேரம் :- 30-35 நிமிடம்

பங்குபற்றுவோர் :- உதவியாளர் உட்பட 25 பேருக்குள்

தகைமை :- வயதெல்லை இல்லை, விரும்பிய கழகங்கள், மன்றங்கள் பங்குபற்றலாம்.

விண்ணப்பம் சுயமாகத் தயாரித்த படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்பவும். விண்ணப்பக் கட்டணம் எதுவும் இல்லை.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 25.10.2003

அனுப்ப வேண்டிய முகவரி :- இணைப்பாளர்/செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்,
கல்லூரி வீதி, இளவாலை.

பரிசு விபரம் :- 1ம் இடம் 3000/=, 2ம் இடம் 2000/=, 3ம் இடம் 1000/=, 4ம், 5ம் இடங்கள் தலா 500/=

குறிப்பு :- திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களினால் நெறியாள்கை செய்யப்படுவதையோ அல்லது பங்கேற்பதையோ தவிர்க்கவும்.

- போட்டி தொடர்பாக கட்டணம் எதுவும் வழங்கப்படமாட்டாது.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
- போட்டிகள் யாவும் 15.11.2003 அன்று மாலை மன்ற அரங்கில் நடைபெறும்.

(502) **செயலாளர்**

# சுதந்திரக்கட்சியுடன் இரகசியப் பேச்சு; ஜே.வி.பியினர் விரும்பவில்லையாம்!

## விமல் வீரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டணி அமைப்பது குறித்து உத்தியோகபூர்வமற்ற - இரகசியப் பேச்சுக்களில் ஈடுபடுவதை விரும்பவில்லையென, ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பியுடன் கூட்டணி அமைப்பது குறித்து இரகசியப் பேச்சுக்களை நடத்துமாறு, சுதந்திரக்கட்சிப் பிரமுகர்கள் சிலரிடம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்தத் திட்டம் குறித்து ஜே.வி.பி அதிருப்தி கொண்டிருப்பதாக விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்துக்கு எதிரான அடுத்த பாதயாத்திரையை எங்கிருந்து ஆரம்பித்து, கொழும்பு நோக்கி நடத்துவது என்பது குறித்து தற்போது ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், மிகவிரைவில் இது குறித்துத் தீர்மானிக்கப்படும் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

# திணைக்கள அனுமதிபெறாமல் சாரதிப் பயிற்சியளிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மோட்டார் வாகனத் திணைக்களத்தின் அனுமதி பெற்றுக் கொள்ளாமல் - யாழ் மாவட்டத்தில் கனரக வாகனசாரதிப் பயிற்சி அளிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வி. பத்மநாதன் தெரிவித்தார்.

குடாநாட்டில் விரைவில் கனரக வாகனங்களுக்குரிய லைசன்ஸ் வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கனரக வாகனங்களுக்கான லைசன்ஸ் வழங்கும் உரிமை - ஆனைக்கோட்டை கந்தப்ப வீதியில் இயங்கும் ஒரே ஒரு கனரக வாகன பயிற்சிக் கல்லூரிக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கனரக வாகன பயிற்சிக் கல்லூரி எவையேனும்- கனரக வாகன பயிற்சியளிக்க விரும்பினால் - கொழும்பிலுள்ள மோட்டார போக்குவரத்து பயிற்சிக் கல்லூரியுடன் தொடர்புகொண்டு, அனுமதி பெற்ற பின்பே பயிற்சியளிக்க முடியும். இதை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திராய்க்கேணியில் மனிதப் புதைகுழி விவகாரம்; பிரதமர் ரணிலுக்கு சந்திரநேரு முறையிடுவார்!

(மட்டக்களப்பு)

அம்பாறையில் திராய்க்கேணியில் மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டது தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளார்.

நாளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதமரை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். இதன்போது - வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

இந்தச் சந்திப்பின் போதே - எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டது தொடர்பாக பிரதமரின் கவனத்திற்கு சந்திரநேரு கொண்டுவரவுள்ளார்.

1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி படையினராலும், ஊர்காவல் படையினராலும் கைதுசெய்யப்பட்டு - 48 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டார்கள். இவர்களது எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான எலும்புக்கூடுகள் இருக்கலாம் என்று தாம் சந்தேகிப்பதாக சந்திரநேரு மேலும் தெரிவித்தார்.

எனவே, பிரதமரின் கவனத்திற்கு இதனைக் கொண்டுவருவதன் மூலம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என தாம் எதிர்பார்ப்பதாகவும் சந்திரநேரு தெரிவித்தார்.

# வடக்கு – கிழக்கு மாகாணத்திற்கென சிறுவர் நலன்பேணும் செயலகம் விரைவில் அமைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கென சிறுவர் நலன்பேணும் செயலகம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை - மாகாண நன்நடத்தை ஆணையாளர் விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, நிர்க்கதிக்குள்ளாகியுள்ள - சிறுவர்களின் அவசர தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு இந்தச் செயலகம் அமையவேண்டியது முக்கியமான ஒன்றாகும் என, சிறுவர் பாதுகாப்பு மற்றும் நன்நடத்தை ஆணையாளர் ரஜனிநடராஜபிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# புதிய பொலிஸ் மா அதிபர் தொடர்பான ஜனாதிபதியின் சிபார்சுக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அரசியல் நிர்ணய சபை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, பொலிஸ்மா அதிபர் ஏ.ரி.ஆனந்தராஜா ஓய்வுபெற்றுச் சென்றுள்ளமையால் வெற்றிடமாகியுள்ள பதவிக்கு - ஜனாதிபதி சிரேஷ்ட உதவி பொலிஸ்மா அதிபர்களுள் ஒருவரான இந்திரா டி சில்வாவின் பெயரைச் சிபார்சு செய்திருந்தார்.

இவருடைய அனுபவம் தொடர்பாக அரசியல் நிர்ணய சபை அதிருப்தி தெரிவித்துள்ளது. ஏனைய சிரேஸ்ட உதவி பொலிஸ்மா அதிபர்களாக காமினி ரந்தெனிய, ஜெயதிஸ்ஸ ஹேரத் சந்திரபெர்ணாண்டோ ஆகியோர் அதிக அனுபவமும், ஆற்றலும் உள்ளவர்களாக இருப்பதாக அரசியல் நிர்ணய சபை தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள பொலிஸ் உயரதிகாரிகளில் இந்திரா டி சில்வாவே வயதிலே முதிர்ந்தவர் என்பதனாலேயே - ஜனாதிபதி இந்த நியமனத்திற்கு சிபாரிசு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி அதிகாரிகளின் அனுபவம், ஆற்றல் தொடர்பான அறிக்கைகளை உடனே சமர்ப்பிக்கும்படி சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவிடம் அரசியல் நிர்ணய சபை கேட்டுள்ளது.

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் கடல்வளப் பாடத்தினை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவையின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

# கண்ணிவெடி அகற்றும் பணியில் டெனிஷ் அமைப்பும் இணைகிறது!

யாழ். மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றும் பணியில் டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் பிரிவு என்னும் புதிய அமைப்பு ஈடுபடவுள்ளதாக, கண்ணிவெடியகற்றும் பிரிவின் செயற்பாட்டு உத்தியோகஸ்தர் எல்மோ ஆனந்தராஜா தெரிவித்தார்.

குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் - ஹலோட்ரஸ் நிறுவனம் மட்டுமே முழுமையாக ஈடுபட்டு வருகின்றது. இந்த அமைப்பில் ஊழியர் பற்றாக்குறையும் மற்றும் சில அசௌகரியங்களும் நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுன்றது.

இத்தகைய குறைபாடுகளை நீக்கும்முகமாக டெனிஷ் கண்ணிவெடியகற்றும் பிரிவும் - கண்ணிவெடி அகற்கும் பணியில் ஈடுபடுமெனக் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் மீளக்குடியமர்வதற்கு வசதியாக - அவர்களது சொந்த இடங்களில் கண்ணிவெடிகளை அகற்றிக் கொடுக்கவும், யாழ் மாவட்டத்தில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் உள்ள இடங்களில் அவற்றை அகற்றவும் - டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவு உதவுமெனவும் எல்மோஆனந்தராஜா தெரிவித்தார்.

இதேவேளை, டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்பாடு-வடக்குக் கிழக்கு மாகாணம் முழுவதும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றதெனவும் அவர் குறிப்பிட்டார்.

## மாணவர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக, இராமநாதன நுண்கலைத்துறை சித்திரமும் வடிவமைப்பும் - 1, 2, 3, ஆம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. அனைத்து மாணவர்களையும் சமூகம் தருமாறு மாணவர் பிரதிநிதி கேட்டுள்ளார்.





பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய 'கூலிக்கு வந்தவன்' நூல் வெளியீட்டு நிகழ்வில் - தலைமையுரையை செங்கைஆழியான் ஆற்றுவதை முதற்படத்திலும், கலாநிதி சி.சிவலிங்கராஜா நூலை வெளியிட்டு வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# மாகாண மட்ட சிறுவர் விளையாட்டுப் போட்டியில் குருகுலம் சிறுவர் இல்ல மாணவிகள் சாதனை!

சமூக நலத்துறைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பெற்ற சிறுவர் இல்லங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குகொண்ட குருகுலம் சிறுவர் இல்ல மாணவிகள் - வெற்றிக்கேடயங்களையும், தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் பலவும் பெற்று - தமக்கும், தமது இல்லத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

கடந்த 11 ஆம் திகதி திருமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் சிறுவர் இல்லங்களான - குருகுலம், பாரதி இல்லம், காந்தி நிலையம் ஆகிய இல்லங்களின் மாணவர்கள் மிகத் திறமையாகப் போட்டியிட்டு அபார வெற்றிகளைக் குவித்துள்ளனர்.

இப்போட்டிகளில் 3 தங்கப் பதக்கங்களையும், 02 வெண்கலப் பதக்கங்களையும் குருகுலம் மாணவிகள் வென்றுள்ளனர். மற்றும் பாரதி இல்ல மாணவி ஒரு தங்கப் பதக்கத்தையும், காந்தி நிலைய மாணவன் ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

15 வயதிற்குட்பட்ட பிரிவில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் வே.திவ்வியவதனி முதல் இடங்களைப் பெற்று - 2 தங்கப் பதக்கங்களையும், உயரம் பாய்தலில் 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

17 வயதிற்குட்பட்ட பிரிவில் தட்டெறிதல் போட்டியில் பங்குபற்றிய ச.செல்வகுமாரி முதல் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும், குண்டெறிதல், உயரம் பாய்தல் போட்டிகளில் 2 ஆம் இடங்களைப் பெற்று 2 வெள்ளிப்பதங்கங்களையும் பெற்றுள்ளார்.

15 வயதிற்குட்பட்ட பிரிவில் - நீளம் பாய்தல் போட்டியில் 2 ஆம் இடத்தைப்பெற்று செ.ஜிம்சி வெள்ளிப் பதக்கத்தையும், 17 வயதிற்குட்பட்ட பிரிவில் - குண்டெறிதல் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்று க.தனுசஜந்தி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர்.

மிகத் திறமையாகச் செயற்பட்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வெற்றிக் கேடயங்கள், சிறப்புப் பரிசில்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தகால யுத்தசூழல் காரணமாக - வன்னிப்பகுதி மாணவர்கள் தமது திறமைகளை கல்வியிலும், விளையாட்டிலும் வெளிக்கொணர முடியாத நிலையில் அவலப்பட்டிருந்தபோது, தற்போதைய சூழலில் அம் மாணவர்கள் மாகாண மட்டத்தில் சென்று போட்டியிட்டு, அபார வெற்றிகளை குவித்துள்ளனர்.

அத்துடன், சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டு விழாவில் சிறந்த சிறுவர் இல்லமாக - தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தும் குருகுலம் சிறுவர் பாராமரிப்பு இல்லம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சிறந்த சிறுவர் இல்லத்துக்கான விருது - மக்கெய்சர் விளையாட்டரங்கில் நடைபெற்ற மாகாண மட்ட விளையாட்டுப்போட்டியின் போது, வடக்கு கிழக்கு மாகாண சமூக நலத்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் என்.ஆர்.ரஞ்சினியிடம் வழங்கப்பட்டது.

போட்டியில் பங்குபற்றிய பெண்கள் சிறுவர் பராமரிப்பு இல்லங்களுக்கு சிறந்த விராங்கனைகளைக் கொண்ட சிறுவர் இல்லத்துக்கான போட்டியில் குருகுலம் பெண்கள் சிறுவர் பாராமரிப்பு இல்லம் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கான விருதினை வடக்கு, கிழக்கு மாகாண புனர்வாழ்வுப் புனரமைப்பு சமூகநலத்துறை அமைச்சின் செயலாளர் க.சிவநாதன் வழங்கினார்.

# சட்டத்திற்கு மாறாக படையினர் நடந்துகொள்வது இராணுவ ஆட்சி நடைபெறுவதைப் பிரதிபலிக்கிறது

## யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு அரசியல் ஆலோசகரிடம் இளம்பரிதி தெரிவிப்பு

சட்டத்திற்கு மாறாகப் படையினர் நடந்து கொள்கின்றமை, குடாநாட்டில் இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது எனும் பிரதிபலிப்பை உண்டாக்கியுள்ளது எனத் தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

பொற்பதி வீதியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார். நேற்று அரசியற்துறை அலுவலகத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அரசியல் ஆலோசகர் ஜியர் சியபோராவுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

முதன் முறையாக யாழ்ப்பாணம் வந்திருந்த சியபோரா - இளம்பரிதியைச் சந்தித்து, குடாநாட்டு நிலவரம் தொடர்பாகக் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடலில் விடுதலைப் புலிகளின் சார்பில் இளம்பரிதியுடன் யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் கயல்விழி, யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் ஆகியோரும் கலந்துகொண்டனர். குடாநாட்டு நிலவரங்கள் தொடர்பாக மேலும் இளம்பரிதி எடுத்து கூறுகையில்,

அண்மையில் நடைபெற்ற விபத்துச் சம்பவங்களின்போது - பொலிஸாரும், இராணுவத்தினரும் நீதிக்கு புறம்பானவகையிலே செயற்பட்டுள்ளனர். இது மக்கள் மத்தியில் ஒரு பயவுணர்வை ஏற்படுத்தியுள்ளது. குடாநாட்டிலே தொடர்ந்தும் இராணுவ ஆட்சியே நடைபெறுகின்றது எனும் பிரதிபலிப்பை உண்டாக்கியுள்ளது.

கடற்தொழிலாளர்கள் சுதந்திரமானமுறையிலே தமது தொழிலை செய்ய முடியாதுள்ளது. அண்மையிலே ஒரு தொழிலாளி அதிகளவான மீன்களைப் பிடித்ததனால், அவற்றைச் சந்தைப்படுத்தும் நோக்கோடு அதிகாலை மூன்று மணிக்குக் கரைக்குத் திரும்பியுள்ளார். ஆனால், கடற்படையினர் குறித்த மீனவர் கரையேற அனுமதி மறுத்துவிட்டனர். காலை ஆறு மணியளவிலேயே கரையேறுவதற்கு முடியும் எனத் தெரிவித்துள்ளனர். இதனால், அந்த மீனவருக்கு மூன்று லட்சம் ரூபாவரை நட்டம் ஏற்பட்டுள்ளது. ஒரு இரவிலே - ஒரு கடற் தொழிலாளியின் பொருளாதாரத்திலே- பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின், இயல்பு வாழ்க்கை ஏற்படும் என எமது மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால, அது நிறைவேறவில்லை. 34 சதவீத நிலப்பரப்பு உயர் பாதுகாப்பு வலயம் எனும் போர்வைக்குள் முடக்கப்பட்டுள்ளது. 25000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்த இருப்பிடங்களை இழந்து, இருப்பிடங்களுக்காக தவித்து கொண்டிருக்கிறார்கள்.

பாதுகாப்பைக் காரணம் காட்டி, படையினர் புதிய பல முகாம்களை அமைத்து வருகின்றனர். இது மக்களுக்குக் பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்துகிறது எனவும் தெரிவித்தார்.

இராணுவ நெருக்குவாரங்களை குறைக்க என்ன செய்யவேண்டும் எனக் கண்காணிப்பு குழுவின் அரசியல் ஆலோசகர் கேட்டதற்கு இளம்பரிதி - மக்கள் தம் சொந்த இருப்பிடங்களில் மீள குடியமர்த்தப்பட வேண்டும். கடலிலே சுதந்திரமாகத தொழில் புரிய அனுமதிக்கவேண்டும். மக்கள் மத்தியிலே நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையில் படையினர் நடந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் இராணுவத்தினர் வீதி விபத்துக்களில் சம்பந்தப்பட்டிருப்பது தொடர்பாக அரசியல் ஆலோசகர் - இளம்பரிதியிடம் வினாவிய போது,

அது ஒரு வகையிலே சமாதான சூழ்நிலையைக் குழப்பும் முயற்சியாகும். தென்னிலங்கையில் சில கட்சிகள் பிரசார நடவடிக்கைகள் மூலம், சமாதானத்தைக் குழப்ப முயற்சிக்கின்றன. சில படையினர் இவ்வாறான விபத்துக்களை ஏற்படுத்தி, மக்களை ஆத்திரம் கொள்ளவைத்து, மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலமாகச் சமாதானத்தைக் குழப்ப முயல்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாகக் கருத்து வெளியிட்ட சியபோரா,

நான் முதல்முறையாக யாழ்ப்பாணம் வந்துள்ளேன். விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியது மகிழ்வாக உள்ளது. அவர்களுடைய கருத்துக்களை நாம் பின்பற்றக்கூடிய விதத்திலே அவை அமைந்துள்ளன.

எமது மாவட்ட செயலகங்களின் செயற்பாடுகளைச் சீரமைப்பதும், அவற்றின் செயற்பாட்டைத் தலைமையகத்துடன் சீரான முறையில் ஒன்றிணைப்பதும்தான் எனது விஜயத்தின் முக்கிய நோக்கம்.

அண்மையில் நடைபெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பாக நான் எதுவித கருத்துக்களையும் கூறவிரும்பவில்லை. அது தொடர்பாகத் தலைமையகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதுதொடர்பான அறிக்கையை வெளியிடுவார்கள்.

மக்கள் மத்தியிலே இயல்பு வாழ்வு ஏற்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அதற்காக அனைவரும் தொடர்ந்து செயற்பட்டு கொண்டேயிருக்கிறோம். கண்காணிப்புக் குழுவிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான உறவை ஆராய்ந்தபோது, அது வரவேற்கக் கூடியதாக இருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பை நிறைவு செய்து, சியபோரா - அரச அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ச)

# பிரதேச செய்தியாளர்களுக்கான வலயரீதியான விசேடசெயலமர்வு

யாழ் பல்கலைக்கழகத்தில் யுனெஸ்கோ ஆதரவுடன் இயங்கிவரும் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும். சகல பத்திரிகைகளையும் சேர்ந்த பிரதேச செய்தியாளர்களுக்கான விசேட செயலமர்வையும், பயிற்சியையும் வழங்க உத்தேசித்துள்ளது.

யாழ். குடாநாட்டை ஐந்து வலயங்களாகப் பிரித்து - யாழ். நகரமும் அதனை அண்டிய பகுதிகளும், வலிகாமம், வடமராட்சி, தீவகம், தென்மராட்சி எனப் பிரதேசரதியாக இந்தச் செயலமரவுகள் நடத்தப்படவுள்ளன.

இவற்றில் பங்குபற்ற விரும்பும் பிரதேச செய்தியாளர்கள் அனைவரும்- தாம் எப்பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதைக் குறிப்பிட்டு, தமது பெயர், முகவரி, தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், அனுபவம் போன்ற விபரங்களைக் கொண்ட சுயவிபரக் கோவையை - யாழ் பல்கலைக்கழகத்தில் அறை இலக்கம் 71 இல் இயங்கிவரும் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டள்ளது.

பிரதேசரீதியாக செயலமர்வு நடைபெறும் திகதி, இடம், ஒழுங்கமைப்பு பற்றிய விபரங்கள் பின்னர்- பத்திரிகைகள் வாயிலாகவும், தனித் தனியாகவும் அறிவிக்கப்படும.

## பாடசாலைக்கு காணி அன்பளிப்பு

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கு, பாடசாலையின் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையினர் - பாடசாலை மைதானத்தின் கிழக்குப்புற எல்லையுடன் ஒன்றரைப் பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து, அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

## கல்வி தொடர்பான போட்டிகள்

எதிர்வரும் 10 ஆம் திகதி உலக உணவுத் தினமான அன்று, யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களிடையே கல்வி தொடர்பான போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. இந்தப் போட்டிகளை நடாத்துவதற்கான பணிகள் - தற்போது நடைபெற்று வருவதாகவும், அதேதினமன்று சத்துணவு வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிஸாருக்கு பிடியாணை

நீதிமன்றத்திற்கு சமுகம் அளிக்காத காரணத்தினால், பொலிஸார் ஒருவருக்குப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிருலப்பனை பொலிஸார் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு, அவரை விசாரணை செய்து, நீதிமன்றத்திற்கு தினமும் ஒரு முறை சமுகமளிக்கவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. நீதிமன்றத்திற்குச் சமுகமளித்து வந்த இந்தப் பொலிஸார் குறித்த சில தினங்களாக நீதிமன்றத்திற்கு சமூகமளிக்காத காரணத்தினால், அவரைக் கைது செய்யும்படி பிடிவிறாந்து ஒன்றினை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.




மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் 2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய அங்கத்தவர்கள் பதவி ஏற்கும் வைபவத்தின்போது, மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு ஒரு பகுதி உடற்பயிற்சி சீருடையை - கல்லூரி உப அதிபரிடம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற வாணி விழாவின் போது, கல்லூரி முகிழ்நிலை ஆசிரிய மாணவிகளால் அரங்கேற்றப்பட்ட நடன நிகழ்வைப் படத்தில் காணலாம்.






# விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை கனேடிய அமைச்சர் சந்திக்கவேண்டும்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

இலங்கைக்கு வரும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் - விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்க வேண்டும் எனப் பல பொது அமைப்புக்கள், கனேடிய தூதரகத்திற்கு வலியுறுத்தி கூறியிருக்கின்றன.

நாளை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள கனேடிய வெளிவிவகார அமைச்சர் - அரச அதிபர், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கைக்கு வருகை தரும் சந்தர்பத்தில், விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரனையும் சந்திப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் விருப்பம் தெரிவித்திருந்தார். இது தொடர்பான கடிதம் ஒன்றையும் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பியிருந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், புலிகளிடம் இருந்து பதில் கிடைப்பதற்கிடையில், விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளை- அமைச்சர் சந்திக்கவிரும்பவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகவே கனேடிய தூதரகத்திற்கு அதிபர்கள் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவையினர் உள்ளிட்ட பல பொது அமைப்புக்கள் கடிதங்களை அனுப்பியுள்ளன.

அந்தக் கடிதங்களில், தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான். இலங்கையில் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக ஆராயவேண்டுமாகவிருந்தால், அவர்களோடு மட்டும்தான் உரையாடி, வெற்றிபெற முடியும்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் நிலையான சமாதானத்தைக் கொண்டுவர வேண்டுமென இருந்தால், சரியானதொரு நிர்வாகம் அமைய வேண்டும். எனவே, விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைக்கவேண்டும். அதன் மூலமாகவே அபிவிருத்தியை எட்டமுடியும்.

எனவே, இலங்கை வரும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் - விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளையும் சந்திக்கவேண்டும் என இந்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

(ச)

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## (இலக்கண வினா விடைகள்)

01. உண்டான் என்பதன் பகுபத உறுப்புகள்?
பகுதி, விகுதி, இடைநிலை.
02. சொல் விளம்பி என்பது?
குழூஉக்குறி.
03. நான்காம் வேற்றுமைக்கு ஓர் உதாரணம்?
பரிசுக்காகப் பாடினான்.
04. உடனிலை மெய்மயக்கம்?
பக்கம்.
05. பண்புத்தொகைக்கு ஓர் சொல்?
வட்டமேசை.
06. பூங்குழல் வந்தாள் என்பது எவ்வகைத் தொகை?
அன்மொழித்தொகை.
07. உரிச்சொல் ஒன்று கூறுக?
உறுமீன்.
08. இலக்கணமுடையது எது?
நிலம்.
09. இலக்கணப் போலியாக வருவது?
நுனிநா.
10. தோன்றல் புணர்ச்சிக்கு ஓர் உதாரணம்?
வாழைப்பழம் (ப்).
11. திரிதல் புணர்ச்சிக்கு ஓர் உதாரணம்?
கடற்கரை.
12. கெடுதல் புணர்ச்சிக்கு ஓர் உதாரணம்?
மரவேர்.
13. பானையில் சோறு இருந்தது. இதில் இல் உணர்த்தும் பொருள்?
இடப்பொருள்.
14. பவளம் போன்ற வாய். இது எந்த வகையணி?
உவமையணி.
15. "வதனமதிக்குடைக்கு" இது எந்த வகையணி?
உருவக அணி.
16. சால, உறு, தவ, நனி என்பவை?
உரிச்சொற்களாகும்.
17. "கண்ணா வா" என்பது எந்த வகைத் தொடர்?
விளித்தொடர்.
18. சாக்கு என்பது எந்த வகைக் குற்றியலுகரம்?
வன்றொடர்க்குற்றியலுகரம்.
19. கட கட என்பது?
இரட்டைக் கிளவி.
20. அருமை பெருமை என்பது?
இணைமொழி.
21. மாதவி சிரித்திலள் என்பது?
எதிர்மறை வாக்கியம்.
22. வாழையின் பிஞ்சு?
கச்சல் எனப்படும்.
23. கப்பல் செலுத்துபவன்?
மீகாமன்.
24. விமானம் செலுத்துபவன்?
வலவன்.
25. திரிசங்கு சுவர்க்கம்போல என்பது?
உவமைத் தொடர்.
26. இருதிணை ஐம்பாலுக்குப் பொதுவாக வரும் சொல்?
உண்டு.
27. அலுமாரி என்பது?
திசைச்சொல்.
28. சொல் + நயம் என்பதைப் புணர்த்தினால்?
சொன்னயம்.
29. சொல்லின் முதலிலும், இறுதியிலும் வரும் வினா எழுத்து?
ஏ.
30. சுட்டமண் என்பதிலுள்ள பெயரெச்சம்?
சுட்ட.
31. ஒற்றுமை ஓங்குக என்பது?
வியங்கோள் அல்லது விருப்பு வாக்கியமாகும்.
32. மொழியில் பயன்படாத சொல் ஒன்று?
நே.
33. இனிப்பு என்பது எந்த வகைப் பெயர்?
பண்புப்பெயர்.
34. பெயரெச்சமாயும், வினைமுற்றாயும் வரும் சொல்?
ஓடும்.
35. சின்னஞ்சிறிய என்பது?
அடுக்கிடுக்குத் தொடர்.
36. கை + நூல் என்பதைப் புணர்த்தினால்?
கைந்நூல்.
37. கரியமனிதன் என்பதில், கரிய என்பது?
குறிப்பு வினைப் பெயரெச்சம்.
38. ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும் பொதுவாக வரும் சொல்?
மேதை.
39. கூலிவேலை என்பது எத்தனையாம் வேற்றுமைத்தொகை?
நான்காம் வேற்றுமை.
40. கோப்பை என்பது எந்தவகை மொழி?
போர்த்துக்கேய மொழி.
41. துஞ்சினார் என்பது?
மங்கலம்.
42. த், ட், இற், இன் என்பது?
இறந்தகால இடைநிலை.
43. "தி" என்பதற்கு எத்தனை மாத்திரை?
ஒன்று.
44. அரசன் என்பான்?
உயர்திணை\ ஆண்பால்\ ஒருமை\ படர்க்கை.
45. பன்மையில் வழங்காத ஓர் சொல்?
மழை\ காற்று\ நீர்.
46. வேற்றுநிலை மெய்மயக்கமாக வருவது?
பங்கயம்.
47. பகுபத உறுப்புக்கள்?
ஆறு.
48. பாடம் படித்தாய் இதிலுள்ள எழுவாய்?
நீ.
49. நிலம், நீர், தீ, வளி, வான் என்பவை?
ஐம்பூதம்.
50. படிப்பான் என்பதைப் புணர்த்தினால்?
படி + ப் + ஆன்
51. அசைநிலை இடைச்சொல் ஒன்று?
மற்று.
52. அலுமாரி, கோப்பை என்பன?
போர்த்துக்கேய மொழி.

~ எஸ்.சரவணபவானந்தன்

இங்கே மடிக்கவும்



# மாணவர் மலர்



## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2003

தசரத மன்னன் கோசல நாட்டை ஆண்டு வந்தான். இவனது நாட்டின் தலைநகர் அயோத்தி. தசரத மன்னனுக்கு - கோசலை, கைகேயி, சுமித்திரை என்னும் மூன்று மனைவியர் இருந்தனர். இவன் தனக்கு நீண்டகாலமாகக் குழந்தைச் செல்வம் இல்லாததால் வருத்தமுற்றான்.
தசரதன், தனது குருவான முனிவரின் ஆலோசனைப்படி புத்திரப் பேற்றை விரும்பி யாகஞ்செய்தான். அதன் பயனாக கோசலை இரா மனைப் பெற்றாள். கைகேயி பரதனைப் பெற்றாள். சுமித்திரை இலக்கு மனையும், சத்துருக்கனையும் பெற்றாள். பிள்ளைகள் நால்வரும் கல்வியிலும் வில் வித்தையிலும் சிறந்து விளங்கினார்கள்.

01. தசரத மன்னன் ஆண்ட நாடு எது?
..........................................................
02. கோசல நாட்டின் தலைநகர் எது?
..........................................................
03. தசரதனின் மனைவியர் யாவர்?
..........................................................
04. தசரதன் ஏன் வருத்தமுற்றான்?
..........................................................
05. தசரதனின் குரு யார்?
..........................................................
06. பரதனின் தாய் யார்?
..........................................................
07. தசரதனின் பிள்ளைகள் எதில் சிறந்து விளங்கினர்?
..........................................................

* கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான ஒத்தசொற்களை எழுதுக.

08. மன்னன்.................. 09. குழந்தை..................

* கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக.

10. நீண்ட.................. 11. அரசன்..................

* கீழே தரப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான எதிர்ப்பாற்சொற்களை எழுதுக.

12. மனைவி.................. 13. அரசன்..................

* இப்பந்திகளில் காணப்படும் வினைமுற்றுக்கள் இரண்டு தருக.

14.................. 15..................

* இப்பந்திகளில் காணப்படும் பெயர்ச்சொற்கள் இரண்டு தருக.

16.................. 17..................

* கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்தில் எழுதுக).

18. மன்னன்.................. 19. குழந்தை..................
20. பிள்ளைகள்.................. 21. கல்வி..................

* கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து, இல 22 முதல் 28 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
தாமரைப் பூவே சாய்ந்தாடு
குத்துவிளக்கே சாய்ந்தாடு
கோயிற் புறாவே சாய்ந்தாடு
பச்சைக் கிளியே சாய்ந்தாடு
பவளக் கொடியே சாய்ந்தாடு"

22. "சாய்ந்தாடு" என்ற சொல்லைப் பிரித்து எழுதுக?
..........................................................
23. இப்பாடலில் வரும் பூ எது?
..........................................................
24. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பறவைகள் இரண்டினை எழுதுக?
..........................................................
25. பச்சை நிறமான பறவை எது?
..........................................................
26. இப்பாடலைப் படிக்கும் குழந்தையின் மனதில் எவ்வாறான உணர்வு ஏற்படும்?
..........................................................
27. இப்பாடலில் அதிகமாக வரும் சொல் எது?
..........................................................
28. பவளம் + கொடி என்பதைப் புணர்த்தி எழுதுக.
..........................................................

* கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லின் கருத்தையும் தமிழில் எழுதுக.


29. Village..................
30. Saturday..................
31. Yellow..................
32. School..................

* இல 33 முதல் 42 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் அடையாளத்தைக் கூற்றின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது இடுக.

33. கறுப்புச்சாயத்துடன் மஞ்சள் சாயத்தைக் கலப்பதால் பச்சை நிறத்தைப் பெறமுடியும். (.......)
34. வாழைப் பூ மரம் ஒருமுறைதான் பூத்துக் காய்க்கும். (.......)
35. வானில் சந்திரன் பூரணமாகத் தெரியும் நாளை, அமாவாசை என்கிறோம். (.......)
36. இலங்கையின் தேசியக்கொடியில் பெரும்பகுதி சிவப்பு நிறமாகும். (.......)
37. நாம் எப்பொழுதும் உணவு, பானங்கள் என்பவற்றை மூடாமல் வைத்திருக்கவேண்டும். (.......)
38. சகல அரசாங்கத் திணைக்களங்களிலும் அரச இலச்சினை சாட்சிப் படுத்தப்படுகின்றது. (.......)
39. ஏலம், பெருந்தோட்டப் பயிர்களுள் ஒன்றாகும். (.......)
40. இலங்கையின் தேசிய மிருகம் மர அணில் ஆகும். (.......)
41. தேசியக்கொடியிலுள்ள மிருகம் வாளேந்திய சிங்கம் ஆகும். (.......)
42. மர அணில் போன்று காட்டுச் சேவலும் இலங்கைக்கு உரித்தான பிராணிகளுள் ஒன்றாகும். (.......)

* இல 43 முதல் 47 வரையுள்ள படங்கள் குறிக்கும் தனிச்சொல்லை எழுதுக.






43.................. 44..................





45.................. 46..................



47..................

* இல 48 முதல் 53 வரையுள்ள வினாக்களில் பின்வரும் தமிழ்ச்சொற்களை சிங்களத்தில் எழுதுக.

48. வணக்கம்.................. 49. நன்றி..................
50. ஆம்.................. 51. இடுங்கள்..................
52. இல்லை.................. 53. ஆசிரியர்..................

✱ இல 54 முதல் 63 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையின் கீழே கோடிடுக.

54. சாதாரண தபால் ஒன்றை உள்நாட்டில் அனுப்புவதற்கு ஒட்ட வேண்டிய முத்திரையின் பெறுமதி யாது?
1. ரூபா 16.50 2. ரூபா 4.50 3. ரூபா 20.00 4. ரூபா 13.00

55. உதைபந்தாட்டக் குழுவிலுள்ள வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. ஆறு 2. பதினொன்று 3. பத்து 4. ஏழு

56. தரப்பட்டுள்ள மரங்களுள் ஆணி வேருள்ள மரம் எது?
1. தென்னை 2. வாழை 3. பனை 4. வேம்பு

57. இலவசக்கல்வியின் தந்தையென அழைக்கப்படுபவர் யார்?
1. என். எம். பெரேரா 2. C.W.W. கன்னங்கரா
3. ஆர். பிரேமதாசா 4. ரணில் விக்கிரமசிங்க

58. ஊசிபோல் இருப்பான், ஊரையே எரிப்பான். அவன் யார்?
1. தடி 2. தீக்குச்சி 3. பாலம் 4. மண்ணெய்.

59. பின்வரும் குறியீடு ? எதனைக் குறிக்கும்?
1. முற்றுப்புள்ளி 2. காற்புள்ளி 3. வினாக்குறி 4. வியப்புக்குறி

60. இன்று காலை ....... பெய்தது. இடைவெளியில் வரவேண்டிய சொல்லை எழுதுக.
1. மலை 2. மழை 3. மளை 4. மாலை

61. பூவின் பகுதிகளில் ஒன்று
1. மரம் 2. இலை 3. அல்லி 4. கிளை

62. கீரை வகைகளில் ஒன்று
1. தும்புத்தா 2. பலாக்காய்
3. பொன்னாங்காணி 4. கரட்

63. அரச இலச்சினையில் மேலே காணப்படுவது
1. சிங்கம் 2. தர்மச்சக்கரம்
3. நெற்கதிர் 4. சந்திரன்


✱ இல 64 முதல் 69 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

64. 8795 ஐ சொற்களில் எழுதுக?
..............................................................

66. 29 ஐ உரோமன் இலக்கத்தில் எழுதுக?
..............................................................


67. 3/10 ஐ தசம எண்ணாக எழுதுக?
..............................................................

68. நிழற்றப்படாத பகுதியின் பின்னமென்ன?

69. 

| Kg | g |
|---|---|
| 15 | 350 |
| 22 | 610 |
| 3 | 274 |

✱ ஆசிரியர் வரைந்த படத்தில் உள்ள சில அம்சங்கள் மாணவர் வரைந்த படத்தில் பிழையாகக் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய பிழையான இடங்களுள் ஐந்தை மாணவர்கள் வரைந்த சித்திரத்தில் கண்டுபிடித்து, அவற்றை சுற்றி வட்டமிடுக.


70. 

✱ சிறிய கடைக்கெனக் கொண்டு வரப்பட்ட பொருட்களினது பட்டியலொன்றின் பகுதி கீழே காட்டப்பட்டுள்ளது. அப்படியலில் உள்ள வெற்றிடங்களை இங்கு அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானதைத் தெரிவு செய்து இலக்கம் 71 முதல் 74 வரை நிரப்புக.


*(பந்து, லீற்றர், டசின், வாளி, கிலோக்கிராம், கிராம், 30, மில்லிலீற்றர்)*


71. 5 ................................ தேயிலை
72. ................................ தேங்காய்கள்.
73. 3 ................................ சேட்டுகள்.
74. 10 ................................ தேங்காய் எண்ணெய்.
75. 15 ................................ நூல்.

✱ இலக்கம் 76 முதல் 78 வரையுள்ள வினாக்களில் பொருத்தமில்லாத படத்தின் கீழ்க் கோடிடுக.

76. 77. 78. 

✱ இலக்கம் 79 முதல் 80 வரை வினாக்களில் முதலாம் படத்துடன் கருத்து நிறைந்த வகையில் தொடர்பு கொண்டிருக்கும் படத்தை தரப்பட்டிருக்கும் நான்கு படங்களில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

79. 


80. 


✱ கீழேயுள்ள விலைப்பட்டியலின்படி இல. 81 முதல் 85 வரையான வினாக்களுக்கு அதன் கீழே கேட்கப்பட்டுள்ள பொருட்களின் விலையை எழுதுக?

| | | |
|---|---|---|
| சீப்பு (1) ரூபா 6.00 | பேனா (2) ரூபா 15.00 | வாழைப்பழம் (3) kg ரூபா 40.00 |
| பந்து (4) ரூபா 15.00 | பாண் (5) ரூபா 13.00 | கொப்பி (6) ரூபா 15.00 |

81. இங்கு காட்டப்பட்டுள்ள பொருட்களின் மிக விலைகூடிய பொருள் எது?
..............................................................

82. நான் ஒரு அப்பியாசக் கொப்பியும், 2 பேனாக்களும் வாங்கினேன். நான் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?
..............................................................

83. கண்ணனிடம் ரூபா 100.00 இருந்தது. அவன் 1 kg வாழைப்பழமும், 2 பந்தும் வாங்கினான். அவனிடம் உள்ள மீதிப் பணம் எவ்வளவு?
..............................................................

84. இங்குள்ள விலைப்பட்டியல் படத்தில் காணப்படும் சமவிலையான பொருட்கள் எவை?
..............................................................

85. தருமிலா ரூபா 20.00 வைத்திருக்கின்றாள். அவள் ஒரு சீப்பும், 1 கொப்பியும் வாங்க விரும்புகிறாள். அவளுக்கு இன்னும் தேவையான பணம் எவ்வளவு?
..............................................................

(தொடரும்...)

**K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்**

— இங்கே மடிக்கவும் —



# க.பொ.த [சாதாரண] மாணவர்களுக்கான வழிகாட்டல் தொடர்

## கணிதம்


01. 1Kg சீனியின் விலை ரூ. 28 எனின், 13/4 Kg சீனியின் விலை யாது?

02. சுருக்குக. 4 - [ 11/2 + 2 1/3]

03. a/4 = 3 எனின், a ஐக் காண்க?

04. 1/81 எனும் எண்ணை 3 இன் வலுவாகத் தருக?

05. தரப்பட்ட உருவில் a இன் பெறுமானத்தைக் காண்க?




06. 0.000687 ஐ விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டில் தருக?

07. என்னிடம் உள்ள பணம் ரூ X உம், தம்பியிடம், என்னிடம் உள்ள பணத்திலும் ரூபா 40 கூடுதலாக உள்ளது. இருவரிடமும் உள்ள மொத்தத் தொகையைக் காட்டுவதற்கு ஓர் அட்சரகணிதக் கோவையை எழுதுக?

08. மட$_{10}$ 0.1 ஐக் காண்க?

09. இருசமபக்கச் செங்கோண முக்கோணி ஒன்றில் செங்கோணமல்லாத மற்றைய கோணம் ஒன்றின் அளவு யாது?

10. இறங்குவரிசையில் ஒழுங்குபடுத்துக?
0.07 km, 650 cm, 1300 mm, 13.1m

11. சுருக்குக?
$\sqrt{12} + \sqrt{27}$ ($\sqrt{3} = 0.4$ எனக் கொள்க)

12. x=y = 2 எனின்,
(i) $x^{-1} y^2$
(ii) $x^{3} y^{-2}$ ஆகியவற்றைக் காண்க?


13. தீர்க்க:
$$\frac{3}{8x+1} = \frac{2}{5x+4}$$

14. A = {1, 3, 5, 7,}, A¹ = {9, 11, 13, 15, 17} எனின், அகிலத்தொடையை (ξ) எழுதுக?

15. 18, 20, 06, 12, 04, 10, 15, 10 எனும் பரம்பலின்
(i) ஆகாரம்
(ii) இடையம் என்பவற்றைக் காண்க?

16. 2 லீற்றர் நன்னீருடன், 50% உப்புச் செறிவுள்ள 500 ml நீர்சேர்க்கப்பட்டதாயின், தற்போதுள்ள நீரில் உப்புச்செறிவின் சதவீதத்தைக் காண்க?


17. 94 cm நீளமுள்ள கம்பி உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வளைக்கப்பட்டதாயின், இதன் ஆரையைக் காண்க? (O வட்ட மையம்)





18. $V = 4/3\ \pi r^3$ இல் r ஐ எழுவாயாக மாற்றுக?

19. 3 y = 2x - 15 எனும் நேர்கோட்டின்,
(i) படித்திறன் யாது?
(ii) வெட்டுத்துண்டு யாது?

20. A,B என்பன தேசப்படம் ஒன்றில் குறிக்கப்பட்ட இரு நகர்களாகும். B இலிருந்து பார்க்கும்போது, A இன் திசைகோள் 210° எனின், A இலிருந்து பார்க்கும்போது, B இன் திசைகோள் யாது?




21. தரப்பட்ட உருவில் $D\hat{A}C = 35°$, $B\hat{C}D = 100°$ எனின், X இன் பெறுமானத்தைக் காண்க?




22. $2x^2 + 5x + 2 = 0$ என்னும் சமன்பாட்டின் மூலங்கள் α+ β எனின்
(i) α+ β
(ii) α β என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க?


23. கடிகாரம் ஒன்றை ரூ. 1100 இற்கு விற்பதனால், 10% இலாபம் கிடைக்கும் எனின், அதன் கொள்விலை என்ன?

24. 3x - 2> 0 என்னும் சமனிலியைத் தீர்த்து எண்கோட்டில் குறித்துக் காட்டுக?

25. 4, 6, 9 ... என்ற பெருக்கல் விருத்தியின் எட்டாவது உறுப்பைக் காண்க?

26. ஒரு குழுவிலுள்ள 4 மாணவர்களின் இடை நிறை 48.5 kg. இவர்களுள் 39 kg நிறையுடைய ஒரு மாணவன் விலகிச் சென்றால், ஏனைய மாணவர்களின் இடை நிறையாதாகும்?

27. படத்தில் AB = 2cm, BD = 4cm, DC = 1 cm எனின், AC இன் நீளத்தைக் காண்க?




28. $101101_{\text{இரண்டு}} + 1200_{\text{மூன்று}}$ என்பதைச் சுருக்கி விடையை அடி பத்தில் தருக?

29. Sin θ = 3\5 எனின் tan θ இன் பெறுமானத்தைக் காண்க?

30. ஒன்றுக்கொன்று சமாந்தரமான இரு பாதுகாப்பு வேலிகளுக்கு மத்தியில் முகாம் ஒன்று அமைந்துள்ளது. இம்முகாமைப் பாதுகாப்பதற்காக முகாமிலிருந்து சமதூரத்திலும், அதேவேளை பாதுகாப்பு வேலியில் அமைந்திருக்குமாறும் நான்கு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் அமைவிடத்தைப் பருமட்டான படம் மூலம் விளக்குக?

நா. கேதீஸ்வரன்
Sp.Trd (MATHS)
யாழ். வரணி மகா வித்தியாலயம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
*அன்பு அகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்*
*அன்புஇல் அதன் அறம்.*
-திருக்குறள்.

## நமது நோக்கு

### ஆனந்தராஜாவின் பதவி ஓய்வும், அது உணர்த்தி நிற்கும் பாடமும்....

கடந்த சில வாரங்களாகவே சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் பதவிக் காலத்தை நீடிப்பது தொடர்பாக, பல்வேறுபட்ட கருத்து முரண்பாட்டு மோதல்கள் உயர் மட்ட சிங்கள அதிகார மட்டத்திலும், இனவாதிகள் மட்டத்திலும் நடந்து வந்தது தெரிந்தவிடயமே.

நேற்று முன்தினத்துடன் 60 வயதைப் பூர்த்தி செய்துள்ள ஆனந்தராஜாவின் பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு, சகல மட்டத்திலும் இருந்த போதிலும், சிங்கள பேரினவாதிகளின் கடுமையான எதிர்ப்பு மற்றும் அச்சுறுத்தல் காரணமாகவும், ஜனாதிபதியின் விருப்பமின்மை காரணமாகவும் அவர் ஒரு தமிழர் என்ற அதியுச்ச பட்ச வெறுப்புக் காரணமாகவும், அது சாத்தயமற்றதொன்றாகிவிட்டது.

அவர் தமிழர்தான், ஆனாலும் சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபரேயாவார். அரசினால் தேர்வு செய்யப்பட்ட, அரசின் அபிலாஷைகளுக்கும், அறிவுறுத்தல்களுக்கும், அரசியல் யாப்பின் சட்டவரையறைகளுக்கும் கட்டுப்பட்டு இயங்கும் அரச விசுவாசமிக்க அதிகாரியாவார். அப்படியிருந்தும் கூட சிங்கள இனவாதிகள் அவரைத் தமிழராக மட்டுமே கண்ணோட்டமிட்டுள்ளார்கள்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் உள்துறை அமைச்சரான ஜோன் அமரதுங்க இவரது பதவிக்காலத்தை மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிப்பது குறித்த, தனது சிபார்சுக்கான அங்கீகாரத்தை, ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரியிருந்தபோதிலும் - அவர், அதனை நேற்று முன்தினம் மாலை வரை வழங்கவில்லை. இதனையடுத்து மூன்றரை தசாப்தத்திற்கும் அதிகமான காலம் சிறிலங்கா பொலிஸ் சேவையில் பணியாற்றிய ஆனந்தராஜா பதவியிலிருந்து ஓய்வுபெறுவதற்கான தமது பத்திரங்களைச் சமர்ப்பித்தார்.

சிறிலங்காவின் உயர் பதவிகளுக்கான நியமனங்கள் மற்றும் சேவைக்கால நீடிப்புகள் போன்ற அனைத்தும் ஆளும் அதிகார வர்க்கத்தவரின் அரசியல் அபிலாஷைகளுக்கேற்ப இனவாத கண்ணோட்டத்துடனேயே இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருக்கும் போது, தமக்குச் சார்பானோரையும், ஐ.தே.கட்சி ஆட்சியில் இருக்கும்போது தமக்குச் சார்பானோரையும், உயர் பதவிகளில் குறிப்பாக பாதுகாப்புத்துறைசார்ந்த உயர் அதிகாரி பதவிகளில் நியமிக்கப்படுவதே வழமையான விடயமாகும். எப்போதாவது, ஒரு தமிழருக்கு தகுதியின் அடிப்படையில் தவிர்க்க முடியாத வகையில், ஒரு உயர் பதவியை வழங்க வேண்டிய நிலை ஏற்படும்போதுகூட அவர் வெறுமனே அதிகார வலுவற்ற ஒரு அதிகாரியாகவே - அரசு சொல்வதைச் செய்யும் ஒருவராகவே தமது பதவிக்காலத்தை கழிக்க வேண்டியவராக இருப்பதும் ஒரு பாரம்பரியமாகும்.

பெரும்பாலான, இத்தகைய சந்தர்ப்பங்களில் இப்படியான உயர் பதவிகள் அரசியல் மூலோபாயங்களுக்கேற்பவே தமிழ் அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதும் வழக்கம். இத்தகைய தமிழ் அதிகாரிகள், தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு அரசால் பயன்படுத்தப்படுவதும் ஒரு மரபேயாகும்.

எப்படியானாலும் தமிழர் ஒருவர் அவர் சிங்கள அரசுக்கு விசுவாசமாக செயற்பட்டாலும் கூட, அவரை உயர் பதவியில் நிலைக்க விடுவதில் பேரினவாதிகள் ஒருபோதுமே விருப்பார்வம் கொண்டவர்களாக இருந்ததில்லை. ஆனந்தராஜாவின் பதவியை நீடிப்பது தொடர்பாக பேச்சுக்கள் அடிபடத் தொடங்கியதுமே சிஹல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளின் தலைமைகள் அதற்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கின. ஆனந்தராஜாவின் சேவையை நீடித்தால் அதற்கு எதிராக போராட்டம் நடத்தப்போவதாகவும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டன.

இதற்கும் வலுவான பின்னணி உண்டு.

ஆனந்தராஜா பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்ற வேளையில், அப்பதவிக்கு தானே தகுதியானவர் என்று கூறிக் கொண்டு அந்த நியமனத்தை கடுமையாக எதிர்த்தபடி பதவியில் இருந்து கொதிப்புடன் ஓய்வுபெற்ற சிரேஷ்ட உதவிப் பொலிஸ்மா அதிபரான எச்.எம்.ஜி.பி. கொட்டகதெனியா நேராகப் போய் இணைந்து கொண்டது. சிஹல உறுமய கட்சியில்தான்.

ஆகவே - ஆனந்தராஜாவின் பதவி நீடிப்புக்கு சிஹல உறுமய எதிர்ப்புக்காட்டக் காரணம் என்னவென்பது, சொல்லாமலேயே புரியும். கடற்படைத் தளபதி தயா சந்தகிரிக்கு கடற்படை மரபுகளை மீறி மூன்றாண்டுகள் பதவி நீடிப்பும், இராணுவத்தளபதி லயனல் பலகல்லவுக்கு அடுத்தடுத்துப் பதவி நீடிப்புகளும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டபோது, அவை நியாயமற்றவையாக பலராலும் கண்டனம் செய்யப்பட்டபோதும்கூட பேரினவாதிகள் சீற்றம் கொள்ளவில்லை. இத்தனைக்கும் இவர்கள் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கடுமையான விமர்சனங்களுக்கு இவர்கள் ஆளாகிய நிலையிலேயே இவர்களுக்கு சேவை நீடிப்புகள் வழங்கப்பட்டன என்பதை குறிப்பிடுதல் இங்கு அவசியமாகின்றது.

ஆனந்தராஜா அவர்களுக்கு 'வக்காளத்து' வாங்கு வதற்காகவோ அல்லது அவர்பக்க நியாயவாதத்தை பேசுவதற்காகவோ இதனை இங்கு குறிப்பிடவில்லை.

மாறாக, சிறுபான்மை சமூகத்தவர் தொடர்பான விடயங்களில் பெரும்பான்மையினக் கட்சிகளின் தலைமைகள் எவ்வாறு இனவாதக் கண்ணோட்டத்துடன் அணுகுமுறைகளை மேற்கொள்கின்றன என்பதையே இங்கு விளக்க முயல்கிறோம்.

இது உயர் பதவிகளில் இருக்கும் தமிழ் அதிகாரிகள் உணர்ந்து கொள்ளவேண்டிய பாடமாகும்.

விசுவாசம் என்பது ஒருபோதுமே பேரினவாதத்தால் கௌரவிக்கப்படுவதில்லை - அது அவர்களால், தமக்கு சாதகமாகவும், சிறுபான்மையினத்திற்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகின்றது என்ற யதார்த்தத்தை சிறுபான்மையின் உயர் அதிகாரிகள் புரிந்து கொள்வது அவசியமாகும்.

## நாடும் நடப்பும்




# மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய அதிகாரிகள் குழு இலங்கை வந்துள்ளது

## எதிர்வரும் நவம்பரில் தமது பணியை ஆரம்பிக்கவும் முடிவு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் அரசியல் வன்முறைகள், மனித உரிமைமீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக, வெளிநாடுகளைச்சேர்ந்த அதிகாரிகள் குழுவொன்று வருகைதந்துள்ளது.

இந்த மாதம், முதலாம் திகதி கொழும்பு வந்த இந்தக் குழுவினர், நாட்டின் பலபாகங்களிலும் கடமையாற்றவுள்ளார்கள். அமெரிக்கா, சுவீடன், பிரேசில், ஜப்பான், கானா போன்ற நாடுகளிலிருந்தே இந்த அதிகாரிகள் குழு வருகை தந்துள்ளது.

இவர்கள் முதற்கட்டமாக - யாழ்ப்பாணம், மாத்தளை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நான்கு மாவட்டங்களிலும் தமது பணிகளை ஆரம்பிக்கவுள்ளனர். தற்போது பதின்மூன்று அதிகாரிகளைக்கொண்ட இக்குழுவினரின் எண்ணிக்கை ஐம்பதாக அதிகரிக்கப்படவுள்ளது.

இலங்கையில் நடைபெறும் தேர்தல்களைக் கண்காணிக்கும் அமைப்பான - வெபரல் அமைப்பே இந்தஅதிகாரிகளை வரவழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் நான்கு மாவட்டங்களிலும், தமது பணிகளை மேற்கொண்டு, சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

நவம்பர் மாதம் முதலாம் திகதியே, இவர்கள் தமது பணிகளை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமரின் ஐ.நா.சபை உரை முழுநாள் விவாதம் 23ம் திகதி

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஆற்றிய உரை தொடர்பாக, எதிர்வரும் 23 ஆம் திகதி முழுநாள் விவாதம் நடத்தப்படவுள்ளது.

ஈராக் மீதான தாக்குதல் குறித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - இங்கு தெரிவித்திருந்த கருத்துக்கள், அரசியல் வட்டாரத்தில் கடும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த உரை குறித்து, நாடாளுமன்றத்தில் முழுநாள் விவாதம் நடத்தப்படவேண்டும் என்று கட்சித் தலைவர்களின் கூட்டத்தில், எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவும், ஜே.வி.பியின் நாடாளுமன்ற குழுத்தலைவர் விமல் வீரவன்சவும் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காலாவதியான பிஸ்கட்டுக்கள் சுகாதார பரிசோதகர்களால் அழிப்பு

வண்ணார்பண்ணை இராமநாதன் வீதியில் அமைந்துள்ள கடையொன்றில், விற்பனை செய்யப்பட்ட காலாவதியான பிஸ்கட் வகைகள் - மாநகர சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் திடீரென, குறிப்பிட்ட வர்த்தக நிலையத்தினைச் சோதனை செய்த ப.ஆறுமுகதாசன் தலைமையிலான, சுகாதார பரிசோதகர்கள் - ஐந்து வகையான 42 பிஸ்கட் பைக்கற்றுக்களை அழித்துள்ளனர். இவையாவும் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதத்துடன் பாவனைத் திகதி முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.குடாநாட்டில், இது போன்று சில வர்த்தகர்கள் பாவனைத்திகதி முடிவடைநத, பழுதடைந்த பொருட்களை விற்பனை செய்கின்றனர். இதனால், அந்த உணவுப்பொருட்களை உண்ணும பொதுமக்கள் நோய்க்கு ஆளாகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இதுபோன்று சுகாதார பரிசோதகர்களின் திடீர் நடவடிக்கையினால், இப்பிரச்சினை ஓரளவு கட்டுப்படுத்தப்படுகின்றது.

## நீர்கொழும்பு மாவட்ட நீதிவான் அடிப்படை உரிமை மீறல் வழக்கு

நீர்கொழும்பு மாவட்ட நீதிவான் எஸ். பி. பண்டாரநாயக்க- கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாக - சரத் என். சில்வா உட்பட சுயாதீன ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

எந்தவிதமான முன்னறிவித்தலுமின்றி தன்னைப் பதவி நீக்கியமை, சட்டவிரோதமான செயல் எனக்கோரியே, இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
(01)

## விசேட அதிரடிப்படையினர் -புலிகள் அக்கரைப்பற்றில் இன்று சந்திப்பு!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் வன்முறைகள் தொடர்பாக ஆராய்வதற்காக - விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், விசேட அதிரடிப்படையினரும் இன்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

அக்கரைப்பற்றிலுள்ள கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில், இச்சந்திப்பு நடைபெறவுள்ளது. விசேட அதிரடிப் படையினர் - விடுதலைப் புலிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவது, இது இரண்டாவது தடவையாகும்.

இரு வாரங்களுக்கு முன்னரும் இத்தகையதொரு சந்திப்பு நடைபெற்றுள்ளது. இன்றைய சந்திப்பின்போது, கிழக்கு மாகாண பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாகவும், இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலைக் கண்காணிப்புக் குழுவே ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத ஆயுதங்களுடன் களனியில் ஐந்து பேர் கைது!

(கொழும்பு)

களனிப் பொலிஸார் - சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்த அரசியல் கட்சி ஆதரவாளர்கள் ஐவரைக் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஐவரில், ஒருவர் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர் எனவும், இன்னொருவர் பொலிஸ் கொன்ஸ்டபிள் எனவும் தெரியவருகிறது.

இவர்கள் அரசியல் கட்சி ஒன்றுடன் தொடர்புடையவர்கள் எனவும், பல கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருப்பதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்திருப்பதாகக் களனி பொலிஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் லால் உடுகம தெரிவித்தார்.

கைதான சந்தேகநபர்களிடம் இருந்து 2 கைக்குண்டுகள், 8 மி.மீ சீனத்தயாரிப்பு கைத்துப்பாக்கி ஒன்று, ஒரு மகசீன் ஆறு ரவைகளும் கைப்பற்றப்பட்டன.

# கலை உலகின் கனவான்

**மறைந்த கவிமாமணி மகா வித்துவான் மா.த.ந.வீரமணி ஐயரின் 72 ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனையொட்டி இவ்வாக்கம் பிரசுரமாகிறது.**

ஒரு கலைக்குயிலின் வாழ்வு நிறைவு பெற்றிருக்கிறது. 'கருமத்தால் காசினியில் நெடிதுயர்ந்து நின்ற மாபெரும் கலைஞனே மகா வித்துவான் மா.த.ந.வீரமணிஐயர்'. கலைஞன் பிறப்பவன்- உருவாக்கப்பட்டவனல்ல என்பதைச் சொல்லுகின்ற இணையற்றவாழ்வு- அது மட்டுமன்றி, அவரது வெற்றிடம் அநேகமாக வெற்றிடமாவே இருக்கப்போகிறது.

மயிலுக்கு தோகைபோல, கவிஞனுக்கு ஞானச்செருக்கு வேண்டும் என்றார். ஆனால், தமது வாழ்வில் அமைதியும், சாந்தமும் அணிகலங்களாக விளங்க, கர்வம் என்ற பொருளே இல்லாமல் வாழ்ந்தார் என்பது அவரைத் தெரிந்த யாவருக்கும் தெரியும். தம்மிடம் வருபவரை உபசரிக்கும்முறை இருக்கிறதே- அவருக்கேயுரிய தனிப்பான்மை. உபசரிப்புமுறையில் தமிழனுக்கு முதலிடம் என்றால், அது வீரமணி ஐயருடைய பண்பாடு, கலாசாரத்திற்குரியதாகும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதற்குரிய தோற்றம். அவர் மாபெரும் கலைஞன் அல்லவா. உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உவகையும், அன்பும், அவரது அழகிய வதனத்தில் தெரியும்! ஆண் பிள்ளைகளைக் கண்டால், அதுவும் அவருக்கு நெருக்கமானவர் என்றால் - 'வாடா கண்ணா வாடா - அருமையடா- சபாஷ்' என்ற தொடர்களும், பெண்பிள்ளைகளைக் கண்டால் - 'வாடி அருமையெடி, மகாலஷ்சுமியெடி' என்ற தொடர்களையும் உதிர்த்தபடி வரவேற்பார், வாழ்த்துவார். இன்றைய கலையுலகம் அவரிடம் பல விடயங்களைக் கண்டிப்பாகக் கற்கவேண்டும். மனம்திறந்து அடுத்தவனை வாழ்த்துவதில் - வீரமணி ஐயாவிற்கு நிகர் அவரேதான். மற்றையது - தன்னைத்தேடி உதவிவேண்டி வருபவர்களுக்கு, அவர்கள் எதிர்பார்த்ததைவிட ஒருபடி மேலாக கலைச் செல்வத்தை அள்ளித்தரும் பண்பு.

1931 ஆம் ஆண்டு ஒக்டோபர் 15 ஆம் திகதி பிறந்தார். தந்தை பிரமஸ்ரீ நடராஜா ஐயருக்கும், தாயார் சுந்தராம்பாளுக்கும், இரண்டாவது ஆண் குழந்தையாகப் பிறந்த ஐயர், இணுவில் இந்து (அன்று சைவப்பிரகாச வித்தியாசாலை) மானிப்பாய் இந்து ஆகியவற்றில் கல்வி கற்று, அதன்பின் தமது 22 ஆவது வயதில் தமிழகம் கலாஷேந்திர நடனப்பள்ளியில் இசை, நடனம் பயின்று அறிவை வளர்த்துக் கொண்டார் ஈழம் திரும்பிய பின் மானிப்பாய் இந்துவில் இசையாசிரியராகவும், மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடன ஆசிரியராகவும் பணியாற்றினார். அதன் பின் பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் ஏறத்தாழ 33 ஆண்டுகள் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். 1984 ஆம் ஆண்டு இவருடைய பல்துறை ஆற்றலைப் பாராட்டி 'முத்தமிழ் வாரிதி' என்ற பட்டம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைச் சமூகத்தால் வழங்கப்பட்டது.

அப்போது இவரை செவ்வி கண்ட குழுவில் ஒருவரான சண்முககுமரேசன் 'சிந்தை' எனத்தொடங்கி, சண்முகப்பிரியா அல்லது சிந்துபைரவியில் ஒரு கீர்த்தனம் அமைக்கும்படி வினவ, பிள்ளையார் சுழிபோட்டு எழுதத்தொடங்கி 'சுபம்' என்று நிறைவாக்கிய பின்பே, பேனாவிற்கு ஓய்வு கிடைத்தது 'சிந்தைக்கினியன் சண்முகப்பிரியன்' என்ற சண்முகப்பிரியா ராக ஆதிதாளக் கீர்த்தனம் அப்போதுதான் பாடப்பட்டது. ஒரு வகையில் வீரமணிஐயர் பிரம்மனோ! என எண்ணும்படியான பல படைப்புக்கள் நாட்டிய நாடகமாக, பா வடிவாக வந்துள்ளன.

1984-11-28 இல் சேர் பொன் இராமநாத வள்ளளின் 54 ஆவது குரு பூஜை விழாவின், சிறப்பு நிகழ்வில் ஐயர் தலைமையில் கவியரங்கம். இதில் ராமநாத வள்ளளின் தொண்டுகளை - கல்வி - சொக்கன், சமூகம் முல்லைமணி சுப்பிரமணியம், சமயம் சண்முககுமரேசன், மகளிர் தொண்டு திருமதி அமிர்தாம்பிகை சதாசிவம் என கவிஞர்கள் பலர் சேர்ந்து கவிதையாகப் பாடினார்கள் அதிலே தலைமைக் கவிஞரின் கவிதைகள் மிகப் பிரதானமானவை. சொக்கன் அவர்களை ஐயர் அறிமுகம் செய்யும்போது,

*சொக்கிட நற்க சொக்கவே வைத்திடும் சொக்கனிவன் வருவான் அவன்*
*இக்கணம் வந்திடுவான்.*
*தக்கபெருங்கவி தண்டமிழ் மாமழை*
*தந்து கவி பொழிவான் - சொக்கன்.*
*முத்துக் கவி பொழிவான்*
*திக்கெலாம் புகழும் மிக்க இராம*

# கவிமாமணி வீரமணி ஐயர்

*நாததீரனின் கலைச்சேவையை - கவ' ஆரமதாய்ப் புனைவான்.*
*பக்குவமாயதை யிக்கவியரங்கினில்*
*பாட்டுகள் தான் படிப்பான் - கவி*
*கேட்டு மகிழ்ந்திடுவோம்.*

என்று அவர் படித்த கவிதையின் அமைப்பு - சந்தக் கவியின் சொந்தக் கவிஞன் ஐயர் என்பதைக் காட்டுகின்றது. இதில் பண்டிதை அமிர்தாம்பிகைக்கு நிறைவு சொல்லும் பாடல்.

*சொல்லமிர்தம் கவியமிர்தம்*



*சொரிந்திடும் தமிழமிர்தம்*
*இல்லமிர்தம் இழையமிர்தம்*
*இனித்திடும் தமிழமிர்தம்.*
*வல்லமிர்தம் வண்டமிழமிர்தம்*
*வழங்கிடும் கருத்தமிர்தம்.*
*நல்லமிர்தாம்பிகைக் கவிதை*
*நற்கரும்புச்சாறமிர்தம்.*

என்றுள்ளது இத்தகைய பாடல்களால், அவரது கவி ஆற்றலின் நுண்மாண் நுழைபுலம் நன்கு புலப்படுகிறது. இன்னும், பற்பல சாதனைகள் ஐயரின் அதியற்புதமான ஆற்றலைச் செப்புகின்றன.

பல எண்ணிக்கையற்ற திருத்தலங்கள் மீது அந்தாதி, திரு ஊஞ்சல் என்னும் பல பா வகைகயிலும், பல சிற்றிலக்கிய வடிவங்களிலும் பாடல்கள் பாடியிருக்கிறார். ஒரு திருத்தலத்தின் ஊஞ்சல் ஏழாவது பாடலில் - வாரத்தின் ஏழு நாட்களின் பெயரும் அமையும்படி பாடல் பாடியுள்ளார். கொழும்பு முகத்துவாரம் திருக்கோவில் - நித்தியஸ்ரீ, பரராஜ சேகரப் பிள்ளையார் அருள்மாலை - மலேசியா வாசுதேவன், தில்லையம்பதி சிவகாமி அம்பாள் - சௌந்தராஜன் என்று தமிழகப் பிரபல சங்கீத வித்துவான்கள் இவரது பாடல்களைப் பாடி, இவரைப் பெருமைப்படுத்தி, தாமும் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். திருமலைப்பூர் கபாலீஸ்வரம் கற்பகாம்பிகாமீது பாடப்பட்ட 'கற்பகவல்லி நின்பொற்பதங்கள் பிடித்தேன்' என்ற பாடல் பாரதத்திலே முத்திரை பதித்த பாடலாகும்.

1999 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - வீரமணி ஐயருக்கு கௌரவ முதுகலைமாணிப் பட்டம் வழங்கி, தானுயர்ந்து கொண்டது. சாகித்தியச் ஸாகரம், சாகித்திய சிரோன்மணி, முத்தமிழ் வாரிதி, முத்தமிழ் கலாநிதி, முத்தமிழ்ச் சுரபி, ஆசு கவி, மதுரகவி, அருட்கலை வாரிதி, இயலிசைவாரிதி, கவிமாமணி, கலாரத்னா, கலாபூஷணம், என கிடைத்த ஏகப்பட்ட பட்டங்கள் ஐயரது பேராற்றலை வெளிப்படுத்துகின்றன.

ஈழத்திலிருந்து கொண்டு, இரு[illegible] தேழு மேளகர்த்தா இராகங்க[illegible]கும் கீர்த்தனம் அமைத்து, தமிழ் நாட்டில் வெளியீடு செய்துள்ளார் இதில் 53 ஆவது மேளமாகிய கமனசுரத்தை எவ்வாறு பாட்டில் அமர்த்துவதெனச் சளைத்திருந்த ஐயரவர்கள் - தூக்கத்தின் பாதியில் கண் விழித்து அம்பிகையைப் பார்த்து - 'எனைக் காக்க மனச்சிரமமா' என்று அமைத்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க அற்புத சம்பவங்கள் மிக்க அவருடைய வாழ்க்கை ஒரு சாதனை வாழ்க்கை. நாதஸ்வர கலாசூரி என்.கே.பியை இழந்த சொற்பகாலத்தில் அடுத்த பேரிழப்பு இதுவாகும். இந்த இரு கலைஞரும் உலக நாட்டில் யாழ்ப்பாணத்தை பொட்டிடடுக் காட்டிய மாணிக்கங்கள்.

அரங்கேற்றங்களில் மதிப்பீட்டுரையில் குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதில்லை என்பது ஐயர்மேல் சிலர் கூறும் குறைபாடு. சிறந்த கலைஞன், மகாவித்துவான், உயர்ந்த மனிதன் எவ்வாறு மற்றவனைக் குறைகூறுவான். மற்றவனைக் குறைகூற வேண்டியிருந்தும், கூறாது வாழந்தமை ஒரு நிறைவே தவிர, குறையில்லை. இதனால், என்றும் வீரமணி ஐயா நாதரூபமாக அனைவரது அகச் செவிகளிலும் ஒலித்துக் கொண்டிருப்பார் என்பது உறுதி.

**கு.பாலசண்முகன்**

# தமிழினத்தின் பரம்பரைச் சொத்தான

இன்று உலகம் வெகுவாகச் சுருங்கிவிட்டது. இலத்திரனியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்பு அதிகரித்த வண்ணமே உள்ளது. இந்த நிலையில், இன்று ஈழத்துக் கூத்து இலக்கிய மரபு பற்றி ஆராயவேண்டிய தேவை இருக்கிறது.

எமது முன்னோர்களுடைய காலத்திலே உச்சநிலையில் நின்ற கலைப்படைப்புக்களாக இந்த கூத்துக்களே கருதப்பட்டன. இன்று சினிமாவினுடைய ஆதிக்கம் அதிகரித்ததன் விளைவு - கூத்து இலக்கியத்திலும் சிறிது பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றுதான் கூற வேண்டும். ஒரு இரவு, இரு இரவு கதைகளாக அன்று கூத்துக்கள் மேடையேற்றப்பட்டன. அன்றைய சமூகம் அதை மனவிருப்போடு இரசித்தது.

ஆனால், இன்றைய உலகு வேகமாக இயங்கிக்கொண்டிருப்பதனால், எல்லோரும் நேரத்திற்கே முக்கியத்துவம் கொடுத்து, மூன்று மணிததியாலங்களுக்குள் முடிவடையக்கூடிய திரைப்படங்களிலேயே அநேகரின் கவனமும் ஈர்க்கப்பட்டுள்ளது. இதனால், இன்றைய காலத்தின் தேவைகருதி, கூத்து இலக்கியங்களும் வெகுவாக குறைக்கப்பட்டு, அதிகம் மூன்று மணித்தியாலங்களிற்கு மேற்படாத படைப்புக்களாக வெளிவருகின்றன. இது காலத்தின் கட்டாயம். இதற்காக பல கூத்துமரபுகள் மீறப்பட்டுள்ளன. ஆனாலும், இவை தவிர்க்கப்பட முடியாதவை.

அன்று எமது முன்னோர்கள் - தேங்காய் எண்ணை விளக்குகளை ஏற்றிவைத்து, ஒளி கொடுத்தே கூத்துக்களை ஆடினார்கள். மேடைகள்கூட நான்கு புறமும் வெளியானவையாகவே இருந்தன. இதனால், அனைத்துப் பாத்திரங்களும் நான்கு புறமும் வந்தனம் சொல்ல வேண்டிய தேவை இருந்தது. அது அரசராக இருந்தாலும் சரி. அல்லது சாதாரண கட்டியக்காரனாக இருந்தாலும் சரி வந்தனம் சொல்ல வேண்டியது கட்டாயமான சம்பிரதாயம்.

அன்று அண்ணாவிமார்களும், பக்கவாத்தியக்காரர்களும் மேடைக்கு பின்னாலேயே நடமாடித் திரிவார்கள். ஆற்றுகையை வெளிப்படுத்த அரங்குக்குப் பின்னே இருந்து பல உதவிகளைப் புரிவர்கள். அந்த மரபும் [redacted] மாறிவிட்டது. தற்போது பாக்கவாத்தியங்கள் வேறொரு இடத்திலும், பிற்பாட்டுக்காரர் வேறு ஒரு இடத்திலும், பாத்திரங்கள் வேறு ஒரு இடத்திலும் இருப்பார்கள். மூடிய அரங்குகளே இன்று உள்ளன.

ஈழத்துக் கூத்து முறையிலே- 'வட்டக்களரி' முறை என்பது மிகவும் முக்கியமானது. இது காலச் சூழ்நிலைகளிற்கு ஏற்பவும், மக்களின் ரசனைக்கு ஏற்பவும் தானாகவே மாற்றியமைக்கப்பட்டுவிட்டது. இது வரவேற்புக்குரிய விடயமும்கூட.

ஈழத்துக் கூத்துமரபுகளுடைய தோற்றுவாயாக இருந்தவை பொதுவாக கடவுள் நம்பிக்கையே. ஊரிலே அம்மை நோய் வந்துவிட்டால் அம்மனின் குறைபாடு எனக்கூறி, காத்தவராயன் கூத்து ஆடுவார்கள். இவ்வாறு இறை நம்பிக்கையோடு பிணைந்தபடியே வளர்ந்த கூத்துக்கள், பின் கிறிஸ்தவமதம் - எமது பிரதேசங்களிற்கு வந்தபின்னர், பல மாற்றங்களைக்கண்டது.

கூத்து இலக்கியம் மீது மக்களிற்கிருந்த கலை ஆர்வத்தை கண்ணுற்ற கிறிஸ்தவ மதப் பெரியார்கள், தங்கள் மதத்தினுடைய வரலாற்றுக்கதைகளைக் கூத்துக்களாக மாற்றினார்கள். ஆனால், கூத்து இலக்கியத்தினுடைய அடிச்சட்டத்தை மாற்றாமலேயே மாற்றங்கள் செய்யப்பட்டன.

கிறிஸ்தவ் கூத்து இலக்கியமரபிலே அரசராக வருபவர்கள் ஆடுவார்கள். சேனாதிபதியாக வருபவர் ஆடுவார். ஆனால், புனிதர்களாக வேடமேற்பவர்கள் ஆடுவது குறைவாகவே இருக்கும். காரணம் ஆடுவதன் மூலம் அவர்களது புனிதத்தன்மை கெட்டுவிடும் என நம்பப்பட்டமையே ஆகும்.

'துரிநடனம்' எனப்படும் ஆட்டவகையைப் புனிதர்கள் ஆடமாட்டார்கள். எனவே, இவர்களுடைய பாத்திர வெளிப்பாட்டை வெளிக்கொணர்வதற்காக "வாசகப்பா" எனும் புதியதொரு கவிமுறை தோன்றியது.

புனிதர்களை எதிர்ப்பவர்களும், புனிதர்களும் மேடையிலே தோன்றும்போது, ஒரே நேரத்திலே இரு வேறுப்பட்ட ஆட்டமுறைகளைக் காட்டவேண்டிய தேவை இதனால், எழுந்தது. ஒரே காட்சியிலே இரு வேறுபட்ட சுவைகளை மக்கள் பெற்றார்கள். இந்தத் தன்மை, புனிதர்கள் காதைகளிற்கே பெரும்பாலும் பொருந்தக்கூடியதாகும்.

பெண் பாத்திரங்கள் தோன்றும்போது, அவர்கள் ஆண்களைப்போல "வன்நடை" நடக்க முடியாது. அவர்களது நடை "மென்நடை" எனும் வகையாக இருந்தது. இதற்குக் காரணம் - பெண்களுடைய பெருமையும், பவித்திரமும் கெட்டுவிடக்கூடாது என்பதே ஆகும்.

இருவேறுபட்ட குணாதிசங்களையுடைய பாத்திரங்களை காட்டமுனையும்போது, "சுழலுதல்" எனும் செயற்பாட்டைக் கையாண்டார்கள். உதாரணமாக - இராவணேஸ்வரன் என்னும் கூத்து மேடையேற்றப்படுகிறது என்றால், அங்கு இராமனை அமைதியானவராகவும், அவதார புருஷனாகவும் காட்டமுனைவார்கள். அதே வேளை, இராணவனை அசுர குணமிக்கவனாகவும், ஆவேசம் மிக்கவனாகவும் காட்ட விளைவார்கள். இந்த இரண்டு சுபாவங்களையும் காட்டவே, சுழலுதல் எனும் முறை கையாளப்பட்டது. இதன்போது இராணவன் போன்ற பாத்திரங்களின் இடுப்பிலேயுள்ள அரக்கு வேலைகள் நடிகர்களுடைய அசைவுகளிற்கு ஏற்ப சுழலும். இது ஒரு வித்தைபோல இருக்கும். பொதுவாக இந்தியாவிலேயே இந்த முறைமை இருந்தாலும், பின்நாளில் எமது பிரதேசங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டன.

எமது ஈழத்தினுடைய ஒவ்வொரு பிரதேசங்களிற்கும் என, வேறுபட்ட மரபு வழிப்பட்ட கூத்துமுறைமைகள் உள்ளன். கூத்து இலக்கியம் பற்றிய நூல்களை எழுதிய சில எழுத்தாளர்கள், சில பிரதேச கூத்துமுறைகைளை முதன்மைப்படுத்தியும், சில பிரதேசங்களினுடைய கூத்தை ஓரிருவரிகளில் சொல்லியும் இருட்டடிப்பு செய்த வேதனையான விடயங்களும் உண்டு.

**மன்னார் மாவட்ட கூத்து மரபு**

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே இருவகையான கூத்து மரபுகளுண்டு. ஒன்று மாதோட்டப் பாங்கு. மற்றையது வடபாங்கு என்பதாகும். இவற்றிற்கிடையே அவ்வளவு வேறுபாடுகள் இல்லை என்றுதான் தெரிகிறது.

எமது முன்னோர் கூத்துக்களைத் தமது சொத்தாகவே கருதினார்கள்.



# கூத்து இலக்கியம்

**இ.சர்வேஸ்**

சில கூத்துக்களைக் குறிப்பிட்ட சில சமூகத்தவர் தமக்கேயுரியவை என்று உரிமை பாராட்டுவார்கள். அவற்றைப் பிறசமூகத்தவர் ஆடுவதற்கு அனுமயளிக்கமாட்டார்கள். இதற்கு முழுக் காரணமும் கூத்து இலக்கியம் மீதிருந்த பற்றுத்தான். இன்று அந்தநிலை மாறி, யாரும் கூத்துக்களை ஆடமுடியும் எனும் சூழல் உருவாகியுள்ளது. இது ஒருவகையிலே ஆரோக்கியமானதும்கூட.

முன்னர் கூத்துக்கள் ஆடப்படுவதற்குப் பல தோற்றுவாய்கள் இருந்தன. போட்டி, பொறாமைகள்கூட, அத்தகைய தோற்றுவாய்களாக இருந்தன. 'அவன் ஆடிவிட்டான் நாமும் ஆடவேண்டும்' எனும் மனவுணர்வு பின் அரங்கத்திலே ஆடல், பாடலாக வெளிப்படும்.

கூத்துக்கள் பல காரணங்களிற்காக ஆடப்படும். மீள்பாடு இல்லை, கன்னிப் பெண்கள் திருமணம் முடியாமல் இருப்பது, கடலிலே பாசி கரை ஒதுங்குவது, மழை பொய்த்துப் போதல் எனப் பல காரணங்களிற்காக கூத்துக்கள் ஆடப்பட்டன.

கூத்து ஒன்றை ஆடநினைத்ததுமுதல், அரங்கேறும் வரையான அத்தனை நிகழ்வுகளும் காத்திரமான சடங்குகளாகவே அன்று கருதப்பட்டன. முதலிலே "கொமிற்றி" (Commity) கூடுவார்கள். இதனை மன்னாரிலே கொம்மட்டி என்பார்கள். இதிலே ஒவ்வொரு பொறுப்புக்களும் பகிரப்படும். பின் நாள் குறிப்பார்கள். எப்போது இந்தக் கூத்தை ஆடுவது, எதற்காக கூத்து ஆடப்படுகிறது எனும் காணரங்களையும் இதன்போது கூறுவார்கள்.

பின் நேர்த்தி கட்டுதல் எனும் நிகழ்வு இடம்பெறும். வெற்றிலையிலே மஞ்சள், குங்குமம், வெள்ளிக்காசு, நூல் என்பவற்றை வைத்து பூசை செய்வார்கள்.

(தொடரும்)

# சேர்பியரும் - அல்பேனியருக்குமிடையே உயர்மட்டத்திலான பேச்சுக்கள் வியன்னாவில் நடைபெறுகின்றன



1999 ஆம் ஆண்டில் ஏற்பட்ட போரின்பின் முதன்முறையாக சேர்பியர்களுக்கும் கோசோவா அல்பேனியர்களுக்குமிடையே உயர்மட்ட பேச்சுக்கள் வீயன்குவில் நடைபெற்றுவருகிறது.

சேர்பியாவின் பிரதமர் சோரன் சிவ்கோவிக்கும் கோசோவா ஜனாதிபதி இப்ராகிம் ருகோவாவும் பேச்சுக்களில் பங்குகொண்டுள்ளனர்.

1999 போரின் பின் ஐக்கிய நர்டுகள் சபையின் நிர்வாகத்தின் கீழ் கோசோவா அமைந்திருந்தது. நேட்டோ படைகளின் வான் தாக்குதலால் சேர்பியப் படைகள் கோசோவாவில் இருந்து வெளியேறியிருந்தன.

இந்தப் பேச்சின்போது நான்கு முக்கிய பிரச்சினைகளான அகதிகள் மீளவும் நாட்டுக்குத் திரும்புதல், காணாமற்போன மக்கள் போக்குவரத்து தொடர்பு சாதனம், சக்தி வளம் என்பன ஆராயப்படவுள்ளன.


இதனிடையே 3,700 மக்கள் கொசோவாவில் காணாமற் போயுள்ளார்கள். அவர்களில் அதிகமானோர் அல்பேனியர் இனத்தைச் சேர்ந்தவர்களாவர். மேலும் ஒரு லட்சம் சேர்பியர்கள் தமது படைகள் விலகிய பின், வெளியேறியுள்ளார்கள். மேலும் கொசோவாவில் ஒரு பகுதி தம்முடையதென வழக்காடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சந்திரனுக்கு மனிதனை அனுப்புவதை நேரடியாக மக்கள் பார்க்கும் திட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது

முதல் முறையாகச் சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் திட்டத்தை நேரடியாக மக்கள் தொலைக்காட்சி மூலம் பார்வையிடுவது ரத்துச் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் தோல்வி அடைந்தால் மக்களிடம் இருந்து அதிக விமர்சனங்களை எதிர் நோக்க வேண்டிவரலாம் எனக் கருதுவதாக பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தக் கலம் ஜியுகுஆன் செயற்கைக் கோள் தளத்தில் இருந்து, ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி புறப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் பூமியை 14 தடவைகள் சுற்றிய பின் முன்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் இறங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டு வாரத்திற்குள் பாகிஸ்தான் மூன்றாவது ஏவுகணைப் பரிசோதனை



இரு வாரத்திற்குள் மூன்றாவது தடவையாக பாகிஸ்தான் அணு ஆயுதங்களை கொண்டுசெல்லக் கூடிய ஏவுகணை தொடர்பான பரிசோதனையில் ஈடுபட்டுள்ளது.

தனது பிராந்தியத்தில் அமைந்துள்ள இந்தியாவின் எப்பகுதிக்கும் செல்ல கூடிய சகின் என்ற பெயரில் இந்த ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது. இது 433 மைல்கள்வரை செல்லக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் முன்னரே அறிவிக்கக் கூடிய 'ராடர்' கருவிகளை பில்லியன் டொலரில் இந்தியா, இஸ்ரேலிடமிருந்து வாங்குவதற்கென தீர்மானித்திருந்த நேரத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

## உலக நோக்கு

# ஈராக்கை கட்டியெழுப்புவதற்கு புதிய திட்டம்; ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபை ஆராய்வு!

(பக்தாத்)

அரசியல் பொருளாதார ரீதியில் ஈராக்கைக் கட்டியெழுப்புவதற்கு புதிய திட்டமொன்றை ஐ.நா பாதுகாப்பு சபை ஆராய்ந்து வருகின்றது. இது அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய திட்டமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவால் முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு சர்வதேச நாடுகளிலிருந்து போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் இப்புதிய பிரேரணையை வரவேற்றுள்ளனர். அதேநேரத்தில் மேலும் இப்பிரேரணை தொடர்பாக தாம் ஆராயவுள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

இதனிடையே மைறிட்டில் ஒக்ரோபர் 24 ஆம் திகதி நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்பு பிரேரணையை ஐ.நா.பாதுகாப்பு சபையில் வாக்களிப்புக்கு கொண்டுவருவதற்கு அமெரிக்கா விரும்பியுள்ளது. உலக வங்கியின் கணிப்பின் பிரகாரம் ஈராக்கைக் கட்டியெழுப்புவ்தற்கு 55 பில்லியன் டொலர்கள் தேவைப்படுகிறது.

இதனிடையே பிரிட்டன் 550 மில்லியன் பவுண்களை 3 ஆண்டு



காலத்தில் ஈராக்கின் மீள் கட்டமைப்புக்கு வழங்கவுள்ளதாகத் திங்களன்று அந்த நாட்டின் வெளிநாட்டமைச்சர் ஜாக் ஸ்ரோ தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தானில் நேட்டோ படையினரின் பாதுகாப்புப்பணி விஸ்தரிக்கப்படவுள்ளது!

ஆப்கானிஸ்தானில் தலைநகரில் மட்டுமே இதுவரை நேட்டோ படைகள் நிலைகொண்டிருந்தன. தற்போது ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் ஏகமனதாக எடுத்துக்கொண்ட தீர்மானத்தின் மூலம் மற்ற மாகாணங்களிலும் நேட்டோ படையினரை சர்வதேச அமைதிப்படையாக பணியில் அமர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் அமைந்துள்ள குணடுஷ் என்ற நகரத்தில் ஜேர்மன் படையினர் பணிபுரிய ஏற்பாடாகியுள்ளது. ஆப்கானிஸ்தான் அரசு, ஐ.நா. பாதுகாப்புச் சபையின் இந்த முடிவை வரவேற்றுள்ளது.



தலைநகர் காபூலுக்கு அப்பாலும் படைகளைப் பணியில் ஈடுபடுத்துவதன் மூலம், கட்டுப்பாட்டை தலைநகருக்கு வெளியிலும் கொண்டுவரமுடியும் என ஆப்கான் ஜனாதிபதி ஹமிட் ஹர்சாய் வலியுறுத்தியிருந்தார்.

முன்னாள் தலிபான் ஆட்சியில் மிகுதியாக உள்ள படையினர் நாளாந்தம் கிராமப் பகுதிகளில் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே கடந்த ஓகஸ்டில் 5300 நேட்டோ படையினர் ஆப்கானில் கடமையில் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது தொடர்பாக பி.பி.சியின் கிறிஸ்பின் தொநொல்ட் காபூலில் இருந்து குறிப்பிடும்போது, ஆப்கானிஸ்தானில் தலைநகர் தவிர்ந்த பகுதிகளில் முன்னேற்றம் தொடர்பான செய்பாடுகள் அதிகளவில் தொடரும் தாக்குதல்களால் பாதிப்படைந்திருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

இதனிடையே ஆப்கானிஸ்தானின் வெளிநாட்டு அமைச்சர் சர்வதேசப் படையின் அதிகரிப்பு நல்ல பலன்களைத் தரும் எனக் குறிப்பிட்டார்.

## ஊர்சுற்றி எழுதுவது

யாழ்ப்பாண நகரிலுள்ள போதனாவைத்தியசாலை (பெரியாஸ்பத்திரி) யில் சுகாதார நிலைமைகளைச் சீராக்குவதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கு யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மாநாடு ஒன்றைக் கூட்டவுள்ளதாக செய்தி தெரிவிக்கின்றது.

பெரியாஸ்பத்திரி வளாகத்தில் இனியும் கட்டடங்கள் கட்டுவதற்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை. காற்றுவரக்கூடிய இடங்களெல்லாம் இப்பொழுது கட்டடங்களாகவே இருக்கின்றன.

விடுதிகளெல்லா (வார்டுகள்) வற்றிலும் நோயாளர்கள் நிறைந்திருக்கிறார்கள். நோயாளர்களுக்கு கட்டில்கள் போடுவதற்கு இடமில்லாதிருக்கும் விடுதிகள் பலவற்றிலும் நோயாளர்கள் தரையில் பாய் விரித்துப் படுத்திருந்து சிகிச்சை பெறுகின்றார்கள்.

நோயாளர்கள் சிலர் உதவியின்றி எதுவும் செய்ய முடியாத நிலையிலுள்ளனர். இவர்களுடன் உறவினர் ஏதாவது உதவிக்கு நின்றுதானாகவேண்டும். கங்காணிமார், தாதிமார் இவர்களின் தேவைகளை நிறைவேற்றமுடியுமென்று சொல்ல முடியாது. கங்காணிமாரிடமும் தாதிகளிடமும் நோயாளர்கள் எந்நேரமும் அன்பையும் அனுதாபத்தையும் எதிர்பார்க்க முடியாது. நெருங்கிய உறவீனர்க்ளிடம் கூட இவற்றை எதிர்பார்க்கமுடியாதபோது அவர்களிடம் இவற்றை எதிர்பார்க்க முடியுமா?

நோயாளரைப்பார்ப்பதற்கு வந்து செல்வோரின் தொகையும் அதிகம். வீதி விபத்துக்களில் காயமடைவோர் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. புறநகர்ப் பகுதிகளிலிருந்து சிகிச்சை பெறவருவோர் தொகையும் அதிகம்.

மக்கள் தாங்களாகவே சுகாதாரத்தையும் சுகத்தையும் ஓரளவுக்காவது பேணி நடந்தால் நாட்டில் வியாதி வருவதற்கு இடமிருக்காது.

யாழ்ப்பாணத்திலுள்ள குடும்பங்களில் நூற்றுக்கு தொண்ணூறு குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவது மேல்நாடுகளில் இப்பொழுது வாழ்ந்து கொண்டு தானிருக்கிறார்கள். போர்நிறுத்தகாலத்தில் பலர் தங்கள் வீடுகளைப் பார்க்கவும் உறவினர்களைச் சந்திக்கவும் இங்கு வந்து சென்றுகொண்டிருக்கின்ற்னர். இவர்கள் தாங்கள் வெளிநாட்டிலிருந்து வந்திருப்பதற்கு தங்களை அடையாளம் காட்டிக் கொள்வதில் செலுத்தும் கவனத்தில் சிறிதளவாவது அந்த நாடுகளில் உள்ள மக்கள் எப்படித் தங்கள் வீட்டையும் நகரத்தையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்கிறார்களென்பதை உறவினர்களுக்கு எடுத்துக் கூறக்கூடாதா? அங்குள்ள மக்கள் பொதுச் சொத்துக்களை எப்படிப் பாதுகாக்கிறார்கள். எவ்வளவு அமைதியாக வாழ்கிறார்களென்பதை இங்கு எடுத்துச் சொல்லக் கூடாதா?

வீடும், வீதிகளும், நகரமும், நாடும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருந்தால் வியாதிகள் பரவாது. தொற்று நோய்கள் தொடரமாட்டா. ஆஸ்பத்திரிகளும் அதிகரிக்கமாட்டா வார்ட்டுகளில் இடநெருக்கடிகளும் ஏற்படமாட்டா.

இன்றுள்ள நிலையில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் இடநெருக்கடியை எப்படித் தீர்ப்பது? புதிய கட்டடங்கள் கட்டவேண்டிய தேவை ஏன் ஏறபட்டுவருகிறது?

இப்பொழுது ஆஸ்பத்திரி நிர்வாகக் கட்டடமும் அதைக் தொடர்ந்துள்ள பகுதிகளுடனுள்ள வெளி நோயாளர் பகுதியும் இருக்கும் இடத்தில் முன்னர் மரவள்ளித் தோட்டம் இருந்தது. பின்னர் அதன் முன்பக்கத்தில் ஒரு கட்டடத்தில் காசநோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. மணிக்கூட்டு வீதிக்கு மறுபுறத்தில் தான் ஐந்தாறு வார்ட்டுகளுடன் பெரியாஸ்பத்திரி இயங்கியது. விக்ரோறியா வீதியில் தான் சிறிய கட்டடத்தில் வெளிநோயாளர் பகுதி இருந்தது என்றார் நண்பர்.

இப்பொழுதும் ஆஸ்பத்திரி இட நெருக்கடியை தீர்க்க விக்டோரியா வீதி தான் கைகொடுக்கலாம் என்றார் தொடர்ந்து. அதெப்படி என்றேன்

இப்பொழுது சுபாஸ் ஹோட்டல் எத்தனை வருடங்களாக இயங்கவில்லை. இந்திய இராணுவமும் இங்குதானிருந்தது. விக்டோரியா வீதியில் சுபாஸ் ஹோட்டல், சுபாஸ் விடுதி ஆகியவை போக இரண்டோ மூன்று வீடுகளிலிருந்தன. இவையாவும் இப்போது இயங்கவில்லை. உயர்பாதுகாப்பு வலயமாக இருக்கிறது. இவை இருந்தும் இல்லாத மாதிரிதான். சுபாஸ் ஹோட்டல் பகுதி முழுவதையும் விக்டோரியா வீதியுடன் சேர்த்து யாழ். போதனா வைத்தியசாலையுடன் இணைத்துவிட்டால் இனியொரு பாதுகாப்பு வலயம் வருவதற்கு இடமிருக்காது என்றார் நண்பர்.

இது இப்போதைக்கு நடக்கக் கூடியதா என்றேன். இப்பவே இதற்குக் குரல் கொடுக்கத் தொடங்க வேண்டும் என்றார் நண்பர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புலிகள் - அமைதிப் படையினர் யாழ்ப்பாணத்தில் சந்தித்தனர்!

வன்முறைகளற்ற அமைதிப்படையின் பிரதிநிதிகளுக்கும், யாழ். மாவட்ட அரசியற் துறையினருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

நேற்றைய கலந்துரையாடலில், வன்முறைகளற்ற அமைதிப்படையின் (நொன் வயலென்ஸ் பீஸ் போஸ்) நிறுவன திட்டப் பணிப்பாளர் வில்லியம் றொக்ஸ், மற்றும் அந்த நிறுவனத்தைச் சேர்ந்த சாள்ஸ், சுசன் ஆகியோருக்கும், விடுதலைப்புலிகளின் தரப்பில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது, புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு பின்பு யாழ்.நிலைமைகள் தொடர்பாகவும், மக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் உள்ள நிலைமைகள் தொடர்பாகக் கேட்டறிந்ததுடன், அண்மைக்கால விபத்து, மற்றும் வன்செயல்கள் தொடர்பாகவும் உயர் பாதுகாப்பு வலயத்தால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் புள்ளிவிபர ரீதியாகத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## நாற்சந்தி

கோவில் ஒன்றில் வழிபாடு செய்து கொண்டிருந்தவரை, அதுவும் 73 வயது வயோதிபர் ஒருவரை, மற்றோர் நபர் வாளால் வெட்டிக் கொலைசெய்ய முயன்றுள்ளார். இச்சம்பவம் உடுப்பிட்டியில் நடைபெற்றுள்ளது.

படுகாயமுற்ற நிலையில், இந்த வயோதிபர் அயலவர்களால் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

வெட்டுவதும், வெட்டுப்படுவதும், கொல்லுவதும், கொல்லப்படுவதும், செய்திகள் என்ற நிலைமாறி அவை வழமையான நிகழ்வுகள் என்ற நிலைமைக்கு வந்துவிட்ட காலம் இதுவாகும்.

அப்படியானால் இதிலுள்ள செய்தி என்னவென்று கேட்கிறீர்கள் அப்படித்தானே...!

வெட்டியவர் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் வந்து வெட்டினார் என்பதேயாகும்.

இந்த காயமுற்ற முதியவரின் மூன்று மகன்களும் அண்மையில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு, தாக்கப்பட்டு, செம்மணி மயானத்தில் காயங்களுடன் போடப்பட்டு - பின்னர் மீட்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

பாதுகாப்புப் படை, யார்யாரை பாதுகாப்பாக செயற்பட வைக்கிறது பார்த்தீர்களா?

'உயர் பாதுகாப்பு வலயங்கள் இருக்கும் வரை பலரது உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்பது தெரிகிறது' என்கிறார் ஒரு அப்பாவிப் பொதுமகன்.

-தெருவாசி

### முன்னோடிப் பரீட்சை

இவ்வருடம் க.பொ.த(சா/த) கடல்வளம் பாடத்தினை, ஒரு பாடமாக எடுக்கவுள்ள பரீட்சார்த்திகளுக்கான முன்னோடிப் பரீட்சை, எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணிமுதல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் - அந்தந்தப் பாடசாலைகளில் பரீட்சைக்குத் தோற்றமுடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - மேற்படி பரீட்சை தொடர்பான வினாத்தாள் பொதியை அந்தந்த வலய கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிணற்றில் தவறி வீழ்ந்து இளம்பெண் பரிதாப மரணம்!

(யாழ்ப்பாணம்)

தண்ணீர் அள்ளச் சென்ற இளம் பெண்ணொருவர், கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் -நேற்று முன்தினம், அராலி அம்மன் கோவிலுக்கருகில் நடந்துள்ளது. கனகலிங்கம் செல்வரூபி (வயது 17) என்பவரே, இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவரர்வார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, பக்கத்து வீட்டில் உள்ள வயோதிபருக்கு தண்ணீர் அள்ளுவதற்காகச் சென்ற இவர், நீண்டநேரமாகியும் திரும்பாததையடுத்து, தாயார் சென்று கிணற்றடியில் பார்த்துள்ளார். அங்கு குறித்த பெண், கொண்டுசென்ற வாளி கிணற்றடியில் இருந்துள்ளது. சந்தேகமடைந்த தாயார் கிணற்றுக்குள் பார்த்தபோது, மகள் கிணற்றுக்குள் இருப்பதைக் கண்டுள்ளார்.

அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்ட மகளை, யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோது, அவர் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இறந்தவரின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு - வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.(121)

# பொலிஸ்திணைக்களத்தின் பொறுப்பு உள்துறை அமைச்சின் செயலரிடம்!

புதிய பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படும்வரை, பொலிஸ் திணைக்களத்தின் பணிகளை கண்காணிக்கும் பொறுப்பு- உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.எம்.ஜீனைட்டிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவர், பிரதம மந்திரியின் பணிப்புக்கமையவே செயற்படவுள்ளார். முன்னாள் பொலிஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா - நேற்றுமுன்தினம் ஓய்வுபெற்றதையடுத்து, புதிய பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படும் வரை, பொலிஸ் சேவைகள் குழப்பமின்றி செயற்படுவதற்கு இந்த உத்தரவு முக்கியத்துவம் பெறுகிறது.

புதிய பொலிஸ் மா அதிபரை உடனடியாக நியமிப்பதில் சிக்கல்கள் தோன்றியுள்ளன. பொலிஸ் மா அதிபராக நியமனம் பெறக்கூடிய நான்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் கடமை மூப்புத் தொடர்பாக, பிரச்சினைகள் எழுந்துள்ளன.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வாவின் பெயரை, ஜனாதிபதி - அரசியல் யாப்பு மன்றத்திடம் முன்வைத்துள்ளார். ஏனைய பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் சேவை மூப்புத் தொடர்பாக, அரசியல் யாப்பு மன்றம் தற்போது ஆராய்ந்து வருகிறது.

இறுதி முடிவை அரசியல் யாப்பு மன்றம் மேற்கொள்வதற்கு, தற்போதைய பிரச்சினைகளை அது எதிர்கொள்ளவேண்டும். 10 அங்கத்தவர்களைக் கொண்ட அரசியல் யாப்பு மன்றத்துக்கு சபாநாயகர் தலைமை தாங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுசந்திகாவும் கணவரும் நேற்று நீதிமன்றில் சரண்!

குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்கவும் அவரது கணவரான தம்மிக நந்தகுமாரவும், நேற்று கொழும்பு மாளிகாவத்தை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

வீதிவிபத்து ஒன்றின்போது, அங்கவீனமுற்ற இராணுவ வீரர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து, இந்த இருவரையும் மாளிகாவத்தை நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

குறித்த தினத்தில் இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இதனால் நீதிவான் இவர்களை கைது செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார். இதனை அடுத்து சுசந்திகாவும் அவரது கணவரும் நேற்று நிதிமன்றத்தில் சரணடைந்தனர்.

இவர்களை 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்லுமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

### மிதிவெடி வெடித்து இளைஞர் காயம்

மிதிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த ஒருவர் - அதனை அகற்றும் வேளை, அது வெடித்ததினால் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

உரும்பிராய் விளாத்தியடிப் பகுதியில் மதிவெடி அகற்றிக்கொண்டிருந்த வேளையிலேயே அது வெடித்து, நாவலர் வீதி - அரியாலையைச் சேர்ந்த பூவிலிங்கம் நகுலதாஸ் (வய்து 25) என்பவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இநத நபர் 'ஹலோ ட்ரஸ்ட்' கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பணியாற்றுபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (121)

# பொலிஸ் மா அதிபரின் பதவிக்கால நீடிப்பு ரத்து: அமைச்சர் மகேஸ்வரன் ஜனாதிபதி மீது பாய்ச்சல்

(கொழும்பு)

தமிழர் என்ற காரணத்தால் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் பதவிக்காலத்தை ஜனாதிபதி சந்திரிகா நீடிக்கவில்லை. ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாடு கண்டிக்கத்தக்கது என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத்தளபதி தயா சந்தகிரி ஆகியோரது பதவிக்காலத்தை நீடித்த ஜனாதிபதி, தமிழர் என்ற காரணத்தால் ரி.ஈ.ஆனந்தராஜாவின் பதவிக்காலத்தை நீடிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் பதவிக்காலத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீடிக்காமை குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. கடந்த இரண்டரை வருடங்களாகச் சேவையாற்றி வந்த பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜாவின் பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிக்குமாறு ஜனாதிபதிக்கு அரசாங்கம் சிபார்சு செய்திருந்த போதிலும் ஜனாதிபதி இத்தகைய முடிவினை எடுத்துள்ளமை தமிழினத்திற்கு செய்துள்ள துரோகமாகும்.

சுயநல அரசியலுக்காக ஜனாதிபதி சிறந்த முறையில் கடமையாற்றிய பொலிஸ்மா அதிபரின் பதவியை நீடிக்காமை கண்டிக்கத்தக்கதாகும். ஜனாதிபதியின் இத்தகைய நயவஞ்சகமான செயற்பாட்டையடுத்து, தமிழர்களின் மானத்தைக் காக்கும் வகையில் பொலிஸ்மா அதிபர் தனது பதவியை உடனடியாகத் துறந்தமை வரவேற்கத்தக்கதாகும்.

உயர்பதவிகளில் உள்ள தமிழர்களை இவ்வாறான செயற்பாடு மூலம் ஜனாதிபதி இல்லாதொழிக்க முயல்கிறார் என்றும் அமைச்சர் அந்த அறிக்கையில் குற்றம் சுமத்தியுள்ளார்.

### தற்போதைய...

தான் திட்டமிட்டுள்ளதாகவும் -

மல்வத்த சங்க சபையுடனும் இது தொடர்பாக விரைவில் பேச்சுக்கள் நடாத்தி, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகவும், தவறினால் சிங்கள மக்களுக்கென்று ஒரு நாடு இல்லாமல் போய்விடும் என்றும், அவர் எச்சரித்துள்ளார். இந்த விடயங்கள் தொடர்பாக தற்போது ஜே.வி.பி முன்னெடுத்து வரும் முயற்சிகளையும், அவர் வெகுவாகப பாராட்டிப் பேசியிருக்கின்றார்.

### டென்மார்க்...

விதார் ஹெல்கிசன், விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் உட்பட பலரையும் அவர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இதேநேரம், நோர்வே விஜயத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் தென்னாபிரிக்கா செல்ல வாய்ப்பிருப்பதாகவும், இதற்கான அழைப்பை தென்னாபிரிக்க அரசு விடுத்துள்ளதாகவும், உத்தியோகப்பற்றற்ற செய்தியொன்று தெரிவிக்கின்றது.

### எந்த இலங்...

எதிர்க்கட்சித்தலைவி, இறந்த ராஜீவ் காந்தியின் மனைவி - ஆளும் கட்சி எடுக்கின்ற ஒவ்வொரு தீர்மானத்தையும், அவதானமாக பார்த்துக்கொண்டிருக்கிறார்.

ஆளும் கட்சியில் இருப்பவர்கள், இந்தத் தீர்வுத்திட்டத்துக்கு உதவி செய்வதாக இருந்தாலும், எதிர்க்கட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான்- எதிர்க்கட்சி பற்றி ஆளும் கட்சியிடமும், ஆளும் கட்சியைப் பற்றி எதிர்க்கட்சியிடமும் இருக்கும் பயத்தினால்தான் வெளிப்படையாக எங்கள் பிரச்சினையில் தலையிடாது இருக்கிறார்கள் என்பதுதான் எனது கணிப்பு என்றார்.

### மன்னாரில் இன்று...

கல்லூரியிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம்- மண்டபத்தடி ஊடாகவும் நிகழ்வு நடைபெறும் இடமான, மன்னார் பொதுவிளையாட்டரங்க மைதானத்திற்குச் செல்லவுள்ளன.

ஊர்வலங்கள் சென்றடைந்ததும், நிகழ்வு நடைபெறும் இடத்தில் பொங்கு தமிழ் சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல் அகவணக்கம், பொங்கு தமிழ் பிரகடனம், சிறப்புரைகள் என்பன இடம்பெறவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வையொட்டி, மன்னார் நகரம் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது. மஞ்சள், சிவப்புக் கொடிகள் - சந்திகள், பொது இடங்களில் கட்டப்பட்டுள்ளதோடு, பொங்குதமிழ் பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன.

### குரங்குபாஞ்சான்...

வெளியேறும்படி எச்சரித்தனர்.

இதனையடுத்து - திலக்ரட்ண தலைமையில் அங்கு எதிர்ப்புக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் செயற்பாடுகள் குறித்து கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

மாலை 3.30 மணியளவில் அவர்கள் அங்கிருந்து வெளியேறினர்.

குரங்குபாஞ்சான் முகாமை நேரில் சென்று பார்வையிடுவதற்கு பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே அனுமதி மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### கொழும்பு வந்துள்ள கனேடிய...

அத்துடன் தனது இலங்கை விஜயத்தில், பரந்தளவில் சந்திப்புக்களை அரசியல் தலைவர்கள், சமூகப் பிரதிநிதிகள் போன்றோருடன் நடத்துவதுடன், போரினால் இவர்கள் எப்படி பாதிப்படைந்துள்ளனர் எனவும் கேட்டறியவுள்ளதாகத் தெரிவித்தார்.

அமைச்சர் இன்று பிரதமர் ரணிலையும் மற்றும் ஜி.எல்.பீரிஸையும் சந்திக்க உள்ளார். அத்துடன் இவர் இலங்கைக்கான நோர்வேத் தூதுவரான ஹான்ஸ் பிரட்ஸ்கரையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்

அமைச்சரின் யாழ்.விஜயத்திற்கு முன்னர் - முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரையும் நாளை சந்திக்க உள்ளார்.

யாழப்பாணத்திற்கு வரும் அமைச்சர் யாழ்.பிராந்திய இராணுவ தளபதி மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரையும் சந்திக்க உள்ளார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய் வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித வி[illegible]கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 94.10 | 94.80 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.61 | 159.74 |
| 1 யூரோ | 108.80 | 110.85 |
| 1 சுவிஸ் பிராங் | 70.22 | 71.71 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.15 | 64.25 |
| 1 ஜப்பானிய யென் | 00.85 | 00.87 |
| 1 சவூதி றியால் | 25.26 | 25.26 |

2003 ஆம் ஆண்டிற்கான
கனணிப் பயிற்சி நெறியின்
இறுதிப் பிரிவுகள் ஆரம்பம்
18. 10. 2003 பயிற்சி நெறிகளுக்கு
பதிவுக் கட்டணம்
அறவிடப்படமாட்டாது.
Soft View Computer College
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna.
T.P.2225170 (சி-1677)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1555 திகதி: 14.10.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| K | 0 | 8 | 8 | 1 | 6 | 9 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.